இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 140 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 14 – சனிக்கிழமை 30 டிசம்பர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 140 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 14 - Saturday 30 December 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (28.12.2023) சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழாவில் "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" என்ற நூலை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் வெளியிட்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. , அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.12.2023) சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலரினை" வெளியிட, கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்,கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சமூகநீதி வரலாற்றில் திருப்புமுனையாக தந்தை பெரியார் நடத்திய

# "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழா - மலர் வெளியீடு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – கேரள முதல்வர் பினராயி விஜயன் முன்னிலையில் நடைபெற்றது !

**சென்னை, டிச. 30-**

**"வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.12.2023) சென்னை, பெரியார் திடலில் நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "வைக்கம் போராட்டம் (1924–2023) நூற்றாண்டு மலரினை வெளியிட, கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம்!**

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததை நீக்கக் கோரி நடந்த வைக்கம் போராட்டத்தில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில் தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். பின்பு பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து, அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்து, வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றது.

"வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110இன் கீழ் 11 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

**தந்தை பெரியார் நடத்திய போராட்ட வரலாற்று நூல்!**

சமூகநீதி வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த வைக்கம் போராட்டத்தினை தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்தி, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எல்லைக் கடந்து போராடி வரலாற்றில் பல புரட்சிகளை நிகழ்த்தி காட்டி வெற்றி கண்ட அவரின் நினைவைப் போற்றவும், அன்னாரின் சமூகநீதிக் கருத்துக்களை பின்வரும் சந்ததியினர் தெரிந்துகொள்ளவும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகளை பல்வேறு அறிஞர் பெருமக்களிடம் இருந்து பெற்று அதனைத் தொகுத்து "வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்" என்ற சிறப்பு மலர் ஒன்றினை தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரித்து வெளியிடப்படும் என்ற ஒரு அறிவிப்பும் அதில் இடம்பெற்றிருந்தது.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், துணைத் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், உறுப்பினர் செயலராகவும்,

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர், தமிழரசு அச்சக இணை இயக்குநர் (வெளியீடுகள்) இரா.அண்ணா, தமிழரசு அச்சக உதவி இயக்குநர் திருமதி அ.மகேஸ்வரி, தமிழரசு அச்சக உதவி பணி மேலாளர் தி.சுயம்புலிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாகவும்,

தமிழ் இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் கோமகன் , மூத்த பத்திரிகையாளர் ப.திருமாவேலன், தமிழறிஞர் பழ.அதியமான் ஆகியோர் ஆலோசகர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையால் இந்நூற்றாண்டு மலர் தயார் செய்யப்பட்டுள்ளது.

**தொடர்ச்சி 2ஆம் பக்கம்**

---

### முத்தமிழறிஞர் கலைஞருக்கு விழா எடுத்து மகிழ்ந்தவர் - 'கேப்டன்' எனத் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும்

# அன்பு நண்பர் விஜயகாந்த் மறைவு ; தமிழ்நாட்டுக்கும், திரையுலகுக்கும் பேரிழப்பு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, டிச. 30-**

**தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், "தமிழுணர்வும், தாராள மனமும் கொண்ட உன்னத மனிதர், 'கேப்டன்' எனத் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் எனது அன்பு நண்பர் விஜயகாந்த் அவர்களின் மறைவு தமிழ்நாட்டுக்கும், திரையுலகுக்கும் பேரிழப்பு" என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

அன்பிற்கினிய நண்பர் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்கள் மறைவெய்திய செய்தி பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. நல்ல உள்ளத்திற்கு சொந்தக்காரரான நண்பர் விஜயகாந்த் அவர்கள் திரையுலகிலும் பொதுவாழ்விலும் தனது கடும் உழைப்பினால் வெற்றிகரமான முத்திரைகளைப் பதித்த சாதனையாளர். நடிகராக, நடிகர் சங்கத் தலைவராக, அரசியல் கட்சித் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக அவர் ஏற்றுக்கொண்ட பணி எதுவாக இருந்தாலும் அதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன்னைச் சார்ந்த அனைவருக்கும் உறுதுணையாக இருந்தவர். குடும்ப நண்பராக என்னிடம் பழகியவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது என்றென்றும் தனிப்பாசம் கொண்டவர்.

**தலைவர் கலைஞர் தலைமையில் குடும்ப நிகழ்வுகளை நடத்திய விஜயகாந்த்!**



தனது திருமணம் உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகளைத் தலைவர் கலைஞர் தலைமையில் நடத்திய தமிழ் உணர்வாளரான நண்பர் விஜயகாந்த், நடிகர் சங்கத்தலைவராக இருந்தபோது தலைவர் கலைஞர் அவர்களின் கலையுலகப் பொன்விழாவைப் பாராட்டி, திரையுலகின் சார்பில் மாபெரும் விழா எடுத்து, தங்கப் பேனாவை பரிசாக அளித்தவர். தலைவர் கலைஞர் அவர்கள் உடல்நலன் குன்றியிருந்தபோது, நேரில் வந்து உடல்நலன் விசாரித்து சென்றதுடன், தலைவர் கலைஞர் மறைவெய்தியபோது, வெளிநாட்டில் இருந்த நண்பர் விஜயகாந்த் கண்ணீர் மல்க காணொளி அனுப்பி தன் இரங்கலைத் தெரிவித்ததையும், வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் விமான நிலையத்திலிருந்து நள்ளிரவில் நேராகச் சென்னை கடற்கரையில் உள்ள தலைவர் கலைஞரின் ஓய்விடம் சென்று தன் வணக்கத்தைச் செலுத்தியதையும் எவரும் மறக்க முடியாது.

**கலைஞரின் கதை வசனத்தில் விஜயகாந்துடன் நானும் பங்கேற்றேன்!**

தமிழுணர்வும் தாராள மனமும் கொண்ட உன்னத மனிதரான நண்பர் விஜயகாந்த் அவர்களுடன் கலைத் துறையில் இணைந்து செயல்பட்ட காலங்கள் நெஞ்சில் நிழலாடுகின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வசனத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடித்த 'மக்கள் ஆணையிட்டால்' என்ற படத்தில், கலைஞர் எழுதிய பாடல்காட்சியில் நானும் பங்கேற்றிருந்தது நினைவில் மலர்கிறது. அவருடனான நட்பு எந்தக் காலத்திலும், எத்தகைய அரசியல் சூழலிலும் மாறவே யில்லை. நண்பர் விஜயகாந்த் உடல்நலன் குன்றியிருந்த நிலையில், இரண்டு முறை நேரில் சென்று சந்தித்து, அவர் விரைந்து நலம் பெற விரும்பினேன். இயற்கை இரக்கமின்றி என் நண்பரின் வாழ்வை எடுத்துக் கொண்டிருக்கிறது.

கேப்டன் எனத் தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் அன்பு நண்பர் விஜயகாந்த் அவர்களின் மறைவு தமிழ்நாட்டிற்கும் திரையுலகிற்கும் பேரிழப்பாகும். இந்த மிகத் துயரமான சூழலில், என்னை நானே தேற்றிக் கொண்டு, கேப்டன் விஜயகாந்த்தை இழந்து தவிக்கும் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தொண்டர்களுக்கும், திரையுலகத்தினருக்கும், ரசிகர்களுக்கும் என் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விஜயகாந்தின் இறுதிப் பயணத்திற்கு அரசு முழு மரியாதை!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். விஜயகாந்த் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 30-12-2023

# ஊழலைப் பற்றி பேசலாமா? - 2

பழனிசாமி மீதான டெண்டர் வழக்கை விசாரிப்பது தொடர்பாக புதிய வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்துக்கு மீண்டும் வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு சார்பாக மூத்த வழக்கறிஞர் துஷ்யந் தவே ஆஜராகி வாதிட்டார். **“டெண்டர் முறைகேடு தொடர்பாக முந்தைய அ.தி.மு.க. அரசு வழக்கை திரும்பப் பெற முடிவு செய்தது. அதற்கு உயர் நீதிமன்றம் அனுமதிக்கவில்லை. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின்போது வழக்கு முறையாக விசாரிக்கப்படவில்லை. எனவே தற்போதைய அரசு வழக்கை மீண்டும் முறைப்படி விசாரிக்க திட்டமிட்டுள்ளது. முன்பு புகார் அளித்த புகார் தாரர்களின் புகார் மீது விசாரணை நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். அதற்குச் சட்டம் தடையாக இல்லை” என்று தெரிவித்தார்.**

புதிய அரசு ஆட்சி அமைந்தால் முந்தைய ஊழல் புகார்கள் மீது விசாரணை நடத்த உரிமை உண்டு என்று உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும் தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார். **“முன்பு லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை மற்றும் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த போது எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தார். அப்போது முறையாக வழக்கு விசாரிக்கப்படவில்லை. அவருக்கு கீழ் இருந்த அதிகாரிகள் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே உச்சநீதிமன்றம் இந்த விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு நோட்டீஸ் அனுப்பி வழக்கை விசாரிக்க வேண்டும்”** என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதிகள், “சட்டம் என்ன அனுமதிக்கிறதோ அதன்படி அரசு செல்லலாம். நாங்கள் எதற்கும் தடை விதிக்கவில்லை. சட்டத்தின் நான்கு மூலைகளுக்குள் நீங்கள் எதை செய்ய விரும்புகிறீர்களோ அதை செய்யலாம” என்று தெரிவித்தனர். எனவே பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கு எப்போது வேண்டுமானாலும் வேகம் எடுக்கலாம்.

அ.தி.மு.க. ஆட்சியில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை கட்டியதில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக முன்னாள் முதல்வர் பழனிசாமி உள்ளிட்டோருக்கு எதிரான புகாரில் விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை தெரிவித்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த என்.ராஜசேகரன் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 11 மருத்துவக் கல்லூரிகளுடன் கூடிய மருத்துவமனைகளை கட்டியதில் மிகப்பெரிய முறைகேடு நடந்துள்ளதாக வழக்கு போட்டிருந்தார்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் செய்த ஊழல் முறைகேடுகளை விசாரணை நடத்தி அம்பலப்படுத்தி வருகிறது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை. முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் பணம் ரூ.2,87,98,650/-, தங்கநகைகள் 6.637 கிலோகிராம், சுமார் 13.85 கிலோகிராம் வெள்ளி மற்றும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் கணக்கில் வராத பணம் ரூ.2,65,31,650/-, வங்கி பெட்டக சாவி மற்றும் வழக்கிற்குதொடர்புடைய ஆவணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ரூ.25 லட்சத்து 56 ஆயிரம் கைப்பற்றப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த வேலுமணி வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.13 லட்சமும், ரூ.2 கோடிக்கான வைப்புத் தொகை, நிலப்பதிவு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வணிகவரித்துறை அமைச்சராக இருந்த வீரமணி வீட்டில் ரூ.34 லட்சம் பணம், 5 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. ரூ.1,80,000 மதிப்பிலான அந்நியச் செலாவணி டாலர் கைப்பற்றப்பட்டுள்ளது. 623 சவரன் தங்க நகைகள், 47 கிராம் வைர நகைகள், 7.2 கிலோ வெள்ளிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. முன்னர் இருந்ததை விட 646 சதவிகிதம் இவரது சொத்து அதிகமானதாக போலீஸார் கணக்கிட்டுள்ளனர்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் விஜயபாஸ்கர், வருமானத்துக்கு அதிகமாக ரூ.27 கோடி சம்பாதித்துள்ளதாக போலீஸார் கணக்கிட்டுள்ளார்கள். ரூ.23 லட்சம் பணமும், 4.87 கிலோ தங்கமும், 136 கனரக வாகனங்களின் ஆவணமும் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. மின்சார அமைச்சராக இருந்த தங்கமணி ரூ.4 கோடி மதிப்பிலான தொகையை வருமானத்துக்கு அதிகமாகச் சேர்த்ததாக ரெய்டு நடத்தப்பட்டு கணக்கில் வராத பணம், சான்று பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்கொண்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் பி.வி.ரமணா ஆகியோர் குட்கா / மாவா விநியோகிப்பாளர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு மத்திய புலனாய்வு அமைப்பு (சி.பி.ஐ.) வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை நடைபெற்று வருகிறது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இருந்த கே.சி. வீரமணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட இசைவு ஆணையை ஆளுநரிடம் கோரியது. அதற்கான அனுமதியை கொடுத்து விட்டார்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் விஜயபாஸ்கர் மீது வருமானத்துக்கு அதிகமாக 35.79 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக புதுக்கோட்டை நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். (2023 மே 22)

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்த கே.பி.அன்பழகன் வருமானத்துக்கு அதிகமாக 45.20 கோடிரூபாய் சொத்து சேர்த்ததாக தர்மபுரி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2023 மே 22)

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் உணவுத் துறை அமைச்சராக இருந்த காமராஜ் மீது வருமானத்துக்கு அதிகமாக ரூ.58 .44 கோடி சொத்து சேர்த்ததாக திருவாரூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (2023 ஜுலை 11)

**இது தான் பழனிசாமி அண்ட் கோ - வின் ஊழல் வரலாறு ஆகும். இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து வாய்க்கு வந்ததைப் பேசிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.**

●●

டிச. 31, ஜனவரி 1ஆம் தேதிகளில்

## தென் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, டிச. 30 –

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தென்தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் டிசம்பர் 31ஆம் தேதியும், ஜனவரி 1ஆம் தேதியும் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா, மாலத்தீவு பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் இப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



சென்னை, பெரியார் திடலில் நேற்று முன்தினம் (28.12.2023) நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவின்போது, தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் மலர்வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

# “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழா...!

முதல் பக்கத் தொடர்ச்சி...

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, இக்குழு ஆலோசனைகளின் பேரில் தயாரிக்கப் பட்டுள்ள “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்” என்ற சிறப்பு மலரினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

### தமிழ் கட்டுரைகள்

இந்நூற்றாண்டு மலரில், பழ.அதியமான் அவர்கள் எழுதிய ‘வைக்கம் போராட்ட கால நிரல்’, ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் எழுதிய ‘கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெற்றியைத் தழுவிய முதல் மனித உரிமைப் பேராட்டம்’, வே.ஆனைமுத்து அவர்கள் எழுதிய ‘கேரளத்தில் ஏழு நாட்கள்’, வாலாசா வல்லவன் அவர்கள் எழுதிய ‘அன்று இருந்த சூழ்நிலைகள்’, அ. கா.பெருமாள் அவர்கள் எழுதிய ‘பெரியாரும் சுசீந்திரம் கோவில் நுழைவுப் போராட்டமும்’, பெருமாள் முருகன் அவர்கள் எழுதிய ‘வைக்கம் போராட்டம்வரலாற்றுச் சாதனை’, கோ.ரகுபதி அவர்கள் எழுதிய ‘சமத்துவத்துக்கான விவாதங்கள்’, நிர்மால்யா அவர்கள் எழுதிய ‘டி.கே.மாதவனுடன் ஒரு தலித் போராட்ட நாயகன்’, ப.திருமா வேலன் அவர்கள் எழுதிய ‘வைக்கம் வீரர் மட்டுமல்ல, கேரள வீரர்’, கி.தளபதிராஜ் அவர்கள் எழுதிய ‘விடை கொடுக்க மறுக்கும் வைக்கம் நினைவுகள்’, திருமதி ஜஸ்வர்யா அவர்கள் எழுதிய ‘வைக்கத்தில் ஈரோட்டுப் பெண்கள்’ போன்ற தமிழ் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### மலையாள கட்டுரைகள்

முனைவர் டி.டி.ஸ்ரீகுமார் அவர்கள் எழுதிய ‘வைக்கம் சத்தியாகிரகத்தின் நூறு வருடங்கள்’, திரு.ரவி வர்மா தம்புரான் அவர்கள் எழுதிய ‘கேரள மறுமலர்ச்சியில் தமிழ் மரபின் வேர்கள்வைக்கம் சத்தியாகிரகம் பின்னணியில் ஒரு பார்வை’, முனைவர் சுரேஷ் மாதவ் அவர்கள் எழுதிய ‘சிற்றேடத்து சங்குப் பிள்ளைவைக்கம் சத்தியாகிரகத்தின் முதல் ரத்த சாட்சி’, திரு.கே.கே. கொச்சு அவர்கள் எழுதிய ‘வைக்கம் சத்தியாகிரகம்சாதி எதிர்ப்பும் பெரியாரும்’, முனைவர் ஓ.கே.சந்தோஷ் அவர்கள் எழுதிய ‘வைக்கம் சத்தியாகிரகம்வரலாறும் சமகாலமும்’, முனைவர் எஸ். ஷாஜி அவர்கள் எழுதிய ‘சாதியமைப்பும் வைக்கம் சத்தியாகிராகமும்’ போன்ற மலையாள மொழி பெயர்க்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் மலையாள கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

### ஆங்கிலக் கட்டுரைகள்

Thiru. Robin Jeffrey அவர்கள் எழுதிய ‘Temple entry Movement in Travancore, 18601940’, V.Balambal அவர்கள் எழுதிய ‘E.V.R and Vaikom Satyagraha’, Dr.T.K.Ravindran அவர்கள் எழுதிய ‘Eight Furlongs of Freedom’, Mary Elizabeth King அவர்கள் எழுதிய ‘Gandhian Nonviolent Struggle and Untouchability in South IndiaThe 1924 1925 Vaikom Satya graha and Mechanisms of Change’,

Thiru. Sunny M.Kapikkad அவர்கள் எழுதிய ‘Vaikom struggleHistorical Significance of Thanthai Periyar’, Thiru. Pazha Athiyaman அவர்கள் எழுதிய ‘Gandhi at Vaikom’ மற்றும் ‘Periyar the Hero of Vaikom’, Thiru. K.A.Shaji அவர்கள் எழுதிய ‘VaikomSatyagrahaThanthai Periyars role and his many differences with Gandhi’ போன்ற ஆங்கில கட்டுரைகள் இந்நூற்றாண்டு மலரில் இடம் பெற்றுள்ளன.

**“வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினை யொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்” என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110-இன் கீழ் 11 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.**

இவ்விழாவில், “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” என்ற நூலை கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் வெளியிட்டார்.

### தந்தை பெரியார் நினைவிடத்தில் முதல்வர்கள் அஞ்சலி!

முன்னதாக, தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் மலர்வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, மருத்துவர் நா.எழிலன், இ. பரந்தாமன், இ. கருணாநிதி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இரா. கஜலட்சுமி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் நேற்று முன்தினம் (28.12.2023) நடைபெற்ற வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கேரளாவிற்கு திரும்பிய கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை, சென்னை விமான நிலையத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழியனுப்பி வைத்தார்.

## 100 ஆண்டுகள் கடந்தும் சமூக நீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கும் போராட்டக் களம் “வைக்கம் போராட்டம்” !

# தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப்பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம்!

## “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் ஆற்றவிருந்த உரையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை !

**சென்னை, டிச. 30 -**

**“100ஆண்டுகள் கடந்தும் சமூக நீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கும் “வைக்கம் போராட்டம்” தான், சாதாரண ராமசாமியாக இருந்தவர், தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம்!” என்றும் “தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப்பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம்!” என்றும், சென்னையில் நேற்று நடக்கவிருந்து, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மறைவினால் ரத்து செய்யப்பட்ட “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா”வில் ஆற்றவிருந்த உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்தார்.**

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (28.12.2023) பிரமாண்டமாக நடைபெறவிருந்த “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழா, எதிர்க்கட்சி முன்னாள் தலைவர் விஜயகாந்த் அவர்களின் மறைவையொட்டி ரத்து செய்யப்பட்டது.

இவ்விழாவிற்காக நேற்று முன்தினம் வருகை தந்திருந்த கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியார் அவர்கள் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி, மரியாதை செலுத்தினர். அதுபோது வைக்கம் போராட்டத்தின் “வைக்கம் போராட்டம் (1924-2023) நூற்றாண்டு மலர்” “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” ஆகிய நூல்களை வெளியிட்டனர். இந்நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



சென்னை, பெரியார் திடலில், நேற்று முன்தினம் (28.12.2023) நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு தந்தை பெரியார் அவர்களின் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார். இந்நிகழ்வின்போது, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றவிருந்த உரை வருமாறு:-

அனைவர்க்கும் வணக்கம். எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னால், முக்கியமான ஒரு செய்தியை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அண்மையில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இதுவரை இல்லாத அளவுக்குப் பெய்த கனமழையால் அங்கே இருக்கக் கூடிய மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில், சகோதரப் பாச உணர்வோடு, ‘அன்போடு கேரளம்’ என்கிற பெயரில், தமிழ்நாட்டுக்கு நிவாரண உதவிகளையும் அதிகாரிகளையும் அனுப்பி வைத்த கேரள மக்களுக்கும், கேரள முதலமைச்சர் சகாவு பினராயி விஜயன் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாடு முதலமைச்சராக என் நெஞ்சார்ந்த நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?**
**‘வை கத்தி! தீண்டாமைக் கழுத்தில்’ என்று**
**வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி**
**வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!”**

என்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது கனல் தெறிக்கும் வரிகளால் எழுதினார்.

### தந்தை பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல!

“ஈ.வெ.இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்” என்று அறிவித்துக் கொண்டு 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களின் சமூகநீதியை நிலைநிறுத்தவும் தந்தை பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமானது வைக்கம் போராட்டம் ஆகும்.

அத்தகைய வைக்கம் வீரர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வெற்றிப் போராட்டங்களில் ஒன்றான வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இவ்விழாவில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள கேரள மாநில முதலமைச்சர் மரியாதைக்குரிய காம்ரேட் பினராயி விஜயன் அவர்களை வருக வருக என்று வரவேற்கிறேன்.

### இணைந்து போராடினால் எதிலும் வெற்றி பெறலாம்!

வைக்கம் போராட்டம் என்பது கேரள சீர்திருத்தவாதிகளும் - தமிழ்நாட்டுச் சீர்திருத்தவாதிகளும் இணைந்து நடத்திய போராட்டம் என்பதால் இரண்டு மாநில அரசும் சேர்ந்து நூற்றாண்டு விழாவை நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அந்த வகையில் நூற்றாண்டு தொடக்க விழாவைக் கடந்த ஏப்ரல் மாதம் 1ஆம் தேதியன்று கேரளாவில் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்கள் நடத்தினார்கள். அதில் நான் கலந்து கொண்டேன். இன்றைய தினம் தமிழ்நாடு அரசு நடத்துகிறது. கேரள முதலமைச்சர் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். இணைந்து போராடினால் எதிலும் வெற்றி பெறலாம் என்பதற்கு உதாரணமாகவும் வைக்கம் போராட்டம் திகழ்கிறது.

கேரளத்தில் சமூகப் புரட்சி இயக்கம் என்பது நாராயணகுரு, டாக்டர் பல்ப்பு பத்மநாபன், குமாரன் ஆசான், அய்யன்காளி, டி.கே.மாதவன் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

தமிழ்நாட்டு புரட்சி இயக்கமானது இராமலிங்க வள்ளலார், வைகுண்டசாமி, அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், டி.எம்.நாயர், தந்தை பெரியார் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது ஆகும்.

இதில் கேரளத்தைச் சேர்ந்த டி.கே.மாதவன் அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தை பெரியாரும் இணைந்து நடத்திய வெற்றிப் போராட்டம்தான் வைக்கம் போராட்டம் ஆகும். 1924-25ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூக சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது.

அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின், வைக்கம் மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்தது. 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள், கேரளத் தலைவர் டி.கே.மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அப்போராட்டம்.

### போராட்டத்திற்கு தலைமையேற்ற தந்தை பெரியார்!

அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாள்களிலேயே, அதே பகுதியைச் சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இன்றிப் போராட்டம் தவித்தது. இச்சூழலில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பலநாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்து பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

போராட்டக்காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை அருவிக்குத்தி என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில் ஒரு மாதகாலம் சிறை தண்டனை அனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஒருமாத காலம் திருவனந்தபுரம் சிறையில் கழித்தார்.

### 74 நாட்கள் சிறையில் இருந்தவர் தந்தை பெரியார்!

வைக்கம் போராட்டம் நடந்தது மொத்தம் 603 நாட்கள். இதில் 141 நாட்கள் தந்தை பெரியார் அவர்கள் பங்கெடுத்தார்கள். அதில் 74 நாட்கள் சிறையில் இருந்தார்கள். வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காகத் தமிழ்நாட்டில் இருந்து 7 முறை கேரளத்துக்குச் சென்றுள்ளார் தந்தை பெரியார்.

தந்தை பெரியார் அவர்களுக்கு என்ன சிறப்பு என்றால் - இந்தப் போராட்டத்தில் கைதான மற்ற தலைவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாக நடத்தப்பட்டார்கள். ஆனால் பெரியாரை மிகமோசமாக நடத்தினார்கள். கையிலும் காலிலும் விலங்கு போட்டு கழுத்தில் மரப்பலகையை மாட்டி அடைத்து வைத்திருந்தார்கள். இதே போராட்டத்தில் கைதாகிச் சிறையில் இருந்த தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவ மேனன் அவர்கள் ‘பந்தனத்தில் நின்னு’ என்ற தலைப்பில் மலையாளத்தில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

ஒரு சீர்திருத்த இயக்கம் அரசியல் பரிணாமம் பெற்று ஆட்சியைப் பிடித்து பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த பெருமை ஆகும். இதனைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் “ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை. என்று குறிப்பிட்டார்கள். பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம், ஒரு திருப்பம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

### சிறையில் மிக மோசமாக நடத்தப்பட்ட தந்தை பெரியார்!

அதன் சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன்... **”தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனாக இருந்தவரும் ஒரு பெரும் பணக்காரரும் உத்தம தேசாபிமானியுமான ஈ.வெ.ராமசாமி அவர்களுக்குக் காலில் சங்கிலி மாட்டப்பட்டு இருந்தது. கைதிகளது தொப்பி மாட்டப்பட்டு இருந்தது. முழங்கால் வரையில் வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் மரக் கட்டையை மாட்டி கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்களுடன் வைக்கப்பட்டுள்ளார். கேரளத்தின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்துக்காகத் தமிழ்நாட்டின் மேல்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவர் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தது எங்களுக்கு புத்துயிர் தந்தது” என்று கே.பி.கேசவ மேனன் எழுதி இருக்கிறார்கள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், உடனே ஈரோடு திரும்பாமல் வைக்கம் சென்று மீண்டும் போராடினார் பெரியார்.**

போராட்டக்காரர்களுக்கும் மன்னருக்குமான பேச்சுவார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தை பெரியாரிடம் கலந்துரையாடல் நடத்திய பிறகே திருவிதாங்கூர் ராணியைச் சென்று சந்தித்தார்.

‘சாலைக்குள் அனுமதிக்கிறோம், கோவிலுக்குள் அனுமதிக்க முடியாது’ என்று ராணி அவர்கள் அப்போது சொன்னார்கள். இதனைப் பெரியார் அவர்களிடம் சொல்லி, ‘கோவில் நுழைவை சிறிதுகாலத்துக்கு நீங்கள் ஒத்தி வைக்க வேண்டும்’ என்று காந்தி அவர்கள் அனுமதி பெற்றார் என்பதும் வரலாறு ஆகும். “திருவிதாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வி.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோஷமடைவார்கள்” என்றும் ‘யங் இந்தியா’ பத்திரிக்கையில் காந்தி அவர்களே எழுதினார்கள் என்றால் பெரியாரின் பங்களிப்பு எவ்வளவு இருந்துள்ளது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

“Mr. Ramasami Naicker arrived on that day from Erode to take charge of the campaign” என்றும்; “One Ramaswami Naicker of Erode is now leading the movement” என்றும் போலீஸ் ஆவணங்களில் பெரியார் பெயர் இருக்கிறது. பெரியார் தலைமை தாங்கினார் என்பதை காவல் துறை ஆவணங்களே சொல்கின்றன.

### தந்தை பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழா!

ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. இதில் பெரியார் வீட்டுப் பெண்கள் அளித்த பங்களிப்பு மிக முக்கியமானது ஆகும். தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்றபோது அவருடன் அவரது மனைவி நாகம்மையாரும், பெரியாரின் சகோதரி கண்ணம்மாவும், பெரியாரின் உறவினர்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாளும் சென்றிருக்கிறார்கள். இவர்கள்தான் கேரளப் பெண்களையும் போராட்டத்துக்குள் கொண்டு வந்தார்கள். போராட்டத்துக்கான நிதி திரட்டுவதற்காக ராட்டை நூற்றார்கள் இவர்கள்.

### போராட்டத்தைக் கையில் எடுத்த நாகம்மையார்!

வைக்கம் போராட்டத்தில் தேசத் துரோகத்தில் ஈடுபட்டதாகப் பெரியார் சிறைப்பட்டிருந்த சமயம் நாகம்மையார் தலைமையிலான ஆறு பெண்கள் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். பெரியார் சிறை வைக்கப்பட்டு இருப்பதால் மற்ற தலைவர்கள் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று நாகம்மையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களை, வைக்கம் கோயில் சாலையை நோக்கி நாகம்மையார் அவர்கள் அழைத்துச் சென்றபோது காவல் துறையால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். ஒவ்வொருவரையும் என்ன ஜாதி என்று கேட்டு அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவரை மட்டும் உள்ளே விடாமல் தடுத்துள்ளது காவல்துறை. அங்கேயே தர்ணா செய்துள்ளார் நாகம்மையார். அவரது போராட்டத்தைக் கேரள பத்திரிக்கைகள் விரிவாக எழுதி உள்ளன.

### அண்ணல் அம்பேத்கருக்கு ஊக்கமளித்த போராட்டம்!

மகத் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். அதன்பிறகுதான் தமிழ்நாட்டில் ஏராளமான கோயில் நுழைவுப் போராட்டங்கள் நடைபெற்றன. அனைவரும் கோயிலுக்குள் நுழையலாம், அதனை யாரும் தடுக்கக் கூடாது என்ற சட்டம் அதன் பிறகுதான் வந்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகிறது. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் இத்தகைய புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும் சமூகநீதிக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தவும் “வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா” நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

### நூற்றாண்டு விழாவையொட்டி அரசு சார்பில் நடந்த நிகழ்ச்சிகள்!

* கடந்த ஏப்ரல் 1ஆம் நாள் கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா” நிகழ்ச்சியில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று உரையாற்றினேன். அன்றைய தினம் வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத்தூணுக்கு மரியாதை செலுத்தினோம்.

* தமிழ்நாட்டில் மிக முக்கியமான வரலாற்று ஆய்வாளர்களில் ஒருவரான பழ. அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” என்ற தமிழ் நூலின் மலையாளம், கன்னட மொழி பெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

* கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்க 8 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாபெரும் நினைவகம் அமைக்கப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மேற்பார்வையில் அது கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாதத்தில் அப்பணிகள் முடிவடையும். அதனைத் திறந்து வைப்பதற்கு நானும் கேரளம் செல்ல இருக்கிறேன்.

* தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன் முதலாகச் சிறை வைக்கப்பட்டிருந்த ‘அருவிக்குத்தி’ கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நான் அறிவித்து இருந்தேன். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கேரளா சென்று அந்த இடத்தை பார்வையிட்டு வந்துள்ளார்கள். அதனை முறைப்படி கேரள அரசிடம் இருந்து பெற்றுப் பணிகள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

* வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்றுத் தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று ‘தமிழரசு’ இதழ் மூலம் கொண்டு வரப்படும் என்று அப்போது அறிவித்து இருந்தேன். அத்தகைய சிறப்பு மலர் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்த மலருக்கு என்ன சிறப்பு என்றால் இது மூன்று மொழிக் கட்டுரைகளைத் தாங்கியதாக அமைந்துள்ளது. தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிக் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

### இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லவே இந்த மலர்!

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் பெரியாரை வைக்கம் வீரர் என்று சொல்கிறார்கள் என்பது போன்ற தோற்றத்தை சிலர் உருவாக்கப் பார்க்கிறார்கள். கேரள வரலாற்று ஆவணங்களிலும் வைக்கம் குறித்து ஆய்வு செய்த ஆங்கில வரலாற்றாசிரியர்களும் பெரியாரின் பங்களிப்பை மறைக்காமல் மறுக்காமல் பதிவு செய்துள்ளார்கள். அதன் முழுத் தொகுப்பாக இந்த மலர் அமைந்துள்ளது.

தந்தை பெரியார், டி.கே.மாதவன், கே.பி. கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, மன்னத்து பத்மநாபன், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் பிள்ளை, காந்திராமன், தாணுமாலையப் பெருமாள் போன்ற தியாகிகளை இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நான் அறிமுகம் செய்தாக வேண்டும். அவர்களது உணர்வை மாநிலத்து மக்கள் பெற்றாக வேண்டும். எத்தகைய கசப்பான காலத்தை பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதற்காகத்தான் இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு சீர்திருத்த இயக்கம் அரசியல் பரிணாமம் பெற்று ஆட்சியைப் பிடித்து பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்த பெருமை ஆகும். இதனைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் “ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை.” என்று குறிப்பிட்டார்கள். பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல; ஒரு சகாப்தம் ஒரு காலகட்டம், ஒரு திருப்பம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வைக்கம் போராட்ட வெற்றி விழா 29.11.1925 நடந்தபோது அதில் கலந்து கொள்ள பெரியாருக்கும் நாகம்மையாருக்கும் அழைப்பு வந்திருந்தது. தலைமை வகிக்கச் சொன்னார்கள்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்





சென்னையில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.பெ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சந்தித்து 'முரசொலி'க்கு தலா 350 சந்தாவிற்கான தொகையினை வழங்கினர்.

# கடந்த கால வரலாறுகளை நினைவூட்ட இதுபோன்ற விழாக்கள் தேவை!

## நூற்றாண்டு சிறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றவிருந்த உரை...

3ஆம் பக்கத் தொடர்ச்சி...

தலைமை வகிக்க மறுத்து வாழ்த்திப் பேசினார் பெரியார். " உரிமையை மறுத்த அரசாங்கமே இப்போது நம்மை கையை பிடித்து அழைத்துச் செல்கிறது. இதுதான் சத்தியாகிரகத்துக்கு ஏற்பட்ட மகிமை. பலாத்காரப் போராட்டம் நடத்தியிருந்தால் கூட இந்த வெற்றியை இவ்வளவு சீக்கிரம் பெற்றிருக்க மாட்டோம்' என்று பேசினார் பெரியார். இத்தகைய வெற்றியின் 100வது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

### 100 ஆண்டுகளில் கிடைத்த மாபெரும் மாற்றம்!

அன்று பெரியாரையும் வைக்கம் போராட்ட வீரர்களையும் கைது செய்தது திருவிதாங்கூர் அரசு. ஆனால் இன்று வைக்கம் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசும் கேரள மாநில அரசும் சேர்ந்து கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. இரண்டு மாநில முதலமைச்சர்கள் இங்கே இருந்து கொண்டாடுகிறோம். இதுதான் வைக்கம் உரிமைப் போராட்டத்தின் வெற்றியாகும். 100 ஆண்டுகளில் கிடைத்த மாபெரும் மாற்றம் இது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசும் கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசும் கொள்கை சார்ந்த அரசாக இருப்பதால் இதனை நாம் கொண்டாடுகிறோம்.

பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டு இருக்கும் போது வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமானது. சாதாரண ராமசாமியாக இருந்தவர் தந்தை பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இதுபோன்ற கடந்த கால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு இது போன்ற விழாக்கள் பயன்பட வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன் நாம் எப்படி இருந்தோம், இப்போது எப்படி இருக்கிறோம் என்ற கடந்த காலத்தை அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்த மாற்றத்தை உருவாக்கியதில் பெரும் பங்கு சமூக நீதித் தத்துவத்துக்கு உண்டு. கல்வியில் வேலை வாய்ப்பில் சமூகப் பங்களிப்பில் நாம் சமூக நீதியை முழுமையாக அடைந்துவிட்டோம். நாம் அரசியல் ரீதியாக தடுக்கப்பட்ட இடங்களில் புகுந்து வெற்றி பெற்று அதிகார நிறுவனங்களைக் கைப்பற்றி விட்டோம். பொருளாதார சுதந்திரம் என்பதும் பல்வேறு வகைகளில் கிடைத்து வருகிறது. ஆனால் சமூகத்தில் ஒரு சில இடங்களில் முழுமையான சமூகநீதி கிடைத்து விட்டதா என்றால் இல்லை என்று சொல்ல வேண்டும்.

### ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பெற்றிட மும்முனைத் தாக்குதல்!

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அனைவரும் அனைத்து இடங்களையும் சமமாக நடத்தப்படுவதைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவற்றையும் நாம் எதிர்த்துப் போராட வேண்டும். சமூக சீர்திருத்தமாக இருந்தாலும் புரட்சியாக இருந்தாலும் சாதாரணமாகக் கிடைத்து விடாது. தானாகக் கிடைத்து விடாது. "தானாய் எல்லாம் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா' என்பது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாட்டு ஆகும். நாம் தான் மாற்றியாக வேண்டும். ஒடுக்கப்பட்டோருக்கான விடுதலையை ஒடுக்கப்பட்டோரே போராடிப் பெற்றாக வேண்டும். பிரச்சாரத்தின் மூலமாக மன மாற்றம் செய்வதும் போராட்டங்களின் மூலமாக வலியுறுத்துவதும் சட்டங்களின் மூலமாகக் கட்டாயப்படுத்துவதுமான மும்முனைத் தாக்குதலை நடத்தியாக வேண்டும்.

தீண்டாமைக்கு எதிராக சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிராக உயர்வு தாழ்வுச் சிந்தனைக்கு எதிராக நாம் போராடியாக வேண்டும். அது மட்டுமல்ல ஆண் பெண் பாகுபாடுகளையப்பட வேண்டும். ஆணாதிக்கச் சிந்தனையும் பெண்கள் மீதான ஒடுக்கு முறையும் தடுக்கப்பட வேண்டும். மார்க்சியம், - பெரியாரியம், அம்பேத்கரியம் போன்ற முற்போக்குச் சிந்தனைகள் அனைத்துமே அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்த்துப் போராட உருவாக்கப்பட்டவைதான்.

இத்தகைய சமூக சீர்திருத்த புரட்சியாளர்கள் காட்டிய வழியில் சமூகநீதி, - சமத்துவ, சமதர்ம, சமுதாயம் அமைக்க நாம் நமது போராட்டப் பயணத்தை இறுதி இலக்கை எட்டும் வரை தொடர்வோம் என்ற உறுதிமொழியை வைக்கம் நூற்றாண்டு விழாவில் எடுத்துக் கொள்வோம்.

தந்தை பெரியார் அவர்கள் மறைந்த போது, தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் 'பெரியார் தனது சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டார், நாம் தொடர்வோம்' என்று குறிப்பிட்டார். தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சுற்றுப் பயணத்தை நாம் அனைவரும் தொடர்வோம், தொடர்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தாம் ஆற்றவிருந்த உரையில் குறிப்பிட்டிருந்தார்.

# ஈரோடு - நெல்லை விரைவு ரெயில் சேவை - செங்கோட்டை வரை நீட்டிப்பு!

நெல்லை, டிச. 30 –

நெல்லை – செங்கோட்டை வழித்தடத்தில் கடந்த சில ஆண்டுகளாக பாசஞ்சர் ரெயில்கள் மட்டுமே இயக்கப்பட்ட நிலையில், தற்போது பாலருவி தினசரி ரெயிலும், தாம்பரம், மேட்டுப்பாளையம் வாரம் ஒருமுறை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலும் இயக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், ஈரோடு – நெல்லை விரைவு ரெயிலை செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் ஈரோடு – நெல்லை விரைவு ரெயில் (16845) சேவையை செங்கோட்டை வரை நீட்டிக்க ரெயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, ஈரோட்டில் இருந்து மதியம் 2 மணிக்கு புறப்படும் ரெயில், இரவு 11.15 மணிக்கு செங்கோட்டையை சென்றடையும்.

செங்கோட்டையில் இருந்து காலை 4.50 மணிக்கு புறப்படும் ரெயில் (16846) ஈரோட்டை மதியம் 3 மணிக்கு சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியக் கழகச் செயலாளர் குளவாய்ப்பட்டி சி.சண்முகம் ஏற்பாட்டில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி, குதிரை வண்டி எல்கை பந்தயத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், புதுக்கோட்டை நகரச் செயலாளர் ஆ.செந்தில், ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், ஓ.எஸ்.வெங்கடாசலம், மு.க.ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், கீரனூர் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் பி.அண்ணாதுரை மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## கிளாம்பாக்கம் பேருந்து முனையம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

காஞ்சிபுரம்,டிச.30-

வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் ரூ.400 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலி னுக்கு வழியெங்கும் பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நந்திவரம் - கூடுவாஞ்சேரி, ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள என்.பி.ஆர். திருமண மண்டபத்தில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

இன்று (30.12.2023 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் 86 ஏக்கர் பரப்பளவில் ரூ. 400 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" என்ற புதிய பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் நாம் நாளும் உயிராய் போற்றி விளங்கும் தமிழ்நாடு முதல்வர் அன்புத் தலைவர் அவர்களுக்கு,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் முதல் வண்டலூர் வரை வழியெங்கும் பிரமாண்டமான முறையில் எழுச்சியான வகையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும், மாவட்டம் முழுவதும் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் சிற்றூர்களில் இருந்து கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அலைகடலென திரண்டு வந்து, தங்கள் கரங்களில் கழகத்தின் இரு வண்ண கொடி பதாகைகளை ஏந்தி மேளதாளம் பேண்டு வாதியம் முழங்க பிரம்மாண்டமான முறையில் உற்சாக வரவேற்பு அளிப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏக மனதாக தீர்மானிக்கிறது.

வருகிற ஜனவரி மாதம், 3வது வாரத்தில் சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் வருங்காலத்திற்கு வழிக்காட்டும் வசந்த மலராய் திகழும் நம் நெஞ்சம் நிறைந்த இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக இளைஞரணி 2வது மாநில மாநாட்டில்,

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக இளைஞர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் 10,000க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு இம்மாநாட்டை பிரமாண்ட மான மாநாடாக வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏக மனதாக தீர்மானிக்கிறது.

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் வருகிற 15.1.2024 திங்கட்கிழமை அன்று கழக கொடி தோரணங்களை அழகுற கட்டி, கழகக் கொடியினை கழக முன்னோடிகளை வைத்து ஏற்றி, பொதுமக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கி தமிழ்ப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பறை சாற்றும் விழாவாக தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழாவினை வழக்கம் போல மிகவும் எழுச்சியுடனும் உற்சாகத்துடனும் மிகச் சிறப்பான முறையில் சமத்துவ பொங்கல் விழாவாக கொண்டாடுவது என்றும், அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் உள்ள மக்கள் அனைவரும் பொங்கல் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கண்டுகளிக்கும் வகையில் தமிழர்களின் வீர விளையாட்டுப் போட்டிகள் கோலப் போட்டி உட்பட பல்வேறு வகையான போட்டிகளை நடத்துவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கி றது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

## கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலை! கே.எஸ்.சந்திரன் தலைமை!


# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் குதிரை வண்டி பந்தயம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பரிசு வழங்குகிறார்கள்!

புதுக்கோட்டை டிச.30-

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம், வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் நடத்தப்படும் மாபெரும் குதிரை வண்டி பந்தயம் இன்று (30.12.2023 சனிக்கிழமை) காலை 9.30 மணி முதல் அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலை வகிக்கிறார். குதிரை வண்டி பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் பரிசுகள் வழங்குகிறார்கள். புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையச்சூரியன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் எம்.எம்.அப்துல்லா எம்.பி., டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், பி.டி.அரசகுமார், செ.அசோக்பாண்டியன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, எம்.லியாகத் அலி, எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, சுப.சரவணன், கீரை,தமிழ் ராஜா, சு.சண்முகம் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஆ.செந்தில், என்.சேட், மு.பி.ம. சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், சி.சண்முகம், வெ.முத்துக்கிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர்.சாமிநாதன், ஓ.எஸ்.வெங்கடாசலம், வை. விஜய குமார், பி.அண்ணாதுரை, உ.முருகேசன் பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம். பழனியப்பன், எம் செந்தில் குமார், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர். செல்லத்துரை, சி.ஆர். வி. சித்ரா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் எம்.எம். பாலு, பூங்கொடி எம்.சிவா, டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், டாக்டர் செ.குறிஞ்சி வாணன், சி.அரங்கநாயகம், கா. இளவரசன், ஆர். உஷா ராணி, அ.பிரபா, ஏ.சுந்தர்ராஜ், இபி.சண்முகம், டாக்டர் கே.என்.அமானுல்லா, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், என்.அன்சாரி பாசித், விளாப்பட்டி எம்.சிவா, ஸ்டாலின் நாராயணசாமி, பி.சதீஷ்குமார், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், எம்.பி. எஸ்.பாரி, வழக்கறிஞர் பாலமுருகன், எம்.வி.முத்தையா, எஸ்.நிஜாமுதீன், சி.மணி, ஆர்.ஜே.அண்ணாதுரை, கே.சிவசுப்பிரமணியன், ஆர். ரவி, கே.டி.ஆர்.தங்கராஜ், எஸ்.தமிழினியன், மாணவரணி துணை அமைப்பாளர்கள் எம். தெய்வானை, சிப்காட் சதீஷ், இரத்தினசபாபதி, கோ.அண்ணாதுரை, செ.பிரசன்னா, எஸ். கணேசன், சி.சண்முகம், எம்.சக்தி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர். காலை 9.30 மணி முதல் 8 மைல் பெரிய குதிரை வண்டி பந்தயமும், காலை 10.30 மணி முதல் 8 மைல் சிறிய குதிரை வண்டி பந்தயமும் நடைபெறுகிறது. பெரிய குதிரை வண்டி பந்தயத்திற்கு ரூ.800 நுழைவுக் கட்டணமும், சிறிய குதிரை வண்டி பந்தயத்திற்கு ரூ.500 நுழைவு கட்டணமாக செலுத்த வேண்டும். வெற்றி பெறும் பெரிய குதிரை வண்டி பந்தயத்திற்கு முதல் பரிசாக ரூ.30,046ம், இரண்டாவது பரிசாக 20,046ம், மூன்றாவது பரிசாக 10,046 ம் வழங்கப்படுகிறது. வெற்றி பெறும் சிறிய குதிரை வண்டி பந்தயத்திற்கு முதல் பரிசாக ரூ.20,046 ம், இரண்டாவது பரிசாக ரூ.15,046ம், மூன்றாவது பரிசாக ரூ.7,046ம் வழங்கப்படுகிறது. முடிவில் அன்னவாசல் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் எம்.எஸ்.ஏ. முகம்மது ரிஷா நன்றி கூறுகிறார்.




நீலகிரி மாவட்டம் உதகை இத்தலார் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அருணா, அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது!

# இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பைக் காத்திட இணைந்து போராடுவோம்!

### “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு சிறப்பு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆற்றவிருந்த உரையில் வலியுறுத்தல்!

**சென்னை.டிச.30–**

**“மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது. எனவே இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பை காத்திட இணைந்து போராடுவோம்” என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற “வைக்கம் போராட்டம்” நூற்றாண்டு விழாவில் ஆற்றவிருந்த உரையில் வலியுறுத்தியுள்ளார்.**

*சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வைக்கம் சத்யாகிரக போராட்ட நூற்றாண்டு விழாவில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் வருமாறு:*

வைக்கம் சத்யாகிரகம் இந்திய வரலாற்றில் இணையற்ற மக்கள் இயக்கம். அதன் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக நாங்கள் இங்கு கூடியுள்ளோம். வைக்கம் சத்யாகிரகத்தில் பங்கேற்றதற்காக கேரளாவும் தமிழ்நாடும் பெருமை கொள்கின்றன. வைக்கம் சத்யாகிரகம் மற்றும் அதன் பாரம்பரியம் என்று வரும்போது, நமது தமிழ் சகோதரர்கள் கேரள மக்களைப் பற்றி பெருமிதம் கொள்கிறார்கள் என்பதற்கு சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்டம் ஒரு சான்றாகும். வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டை நினைவு கூரும் வகையில் இந்த சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்த எனது அன்புச் சகோதரரும் தோழருமான தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளாவில் பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றின. மருமரக்கால் சமரம், அருவிப்புரம் பிரதிஷ்டை, வில்லுவண்டி சாமரம், கல்லுமலை சமரம், கிருர்வாயூர் சத்யாகிரகம் போன்றவை அவற்றில் அடங்கும். மறுமலர்ச்சி இயக்கங்களின் இந்த நீண்ட சங்கிலியில் வைக்கம் சத்யாகிரகம் ஒரு முக்கிய இணைப்பு. இருப்பினும், இது தனித்துவமானது,

இது மற்றவற்றிலிருந்து தனித்து நிற்கிறது. மற்ற இயக்கங்களிலிருந்து இது வேறுபட்டது எப்படி என்றால் சமூக சீர்திருத்தத்தில் கவனம் செலுத்திய மறுமலர்ச்சி இயக்கங்களும், தேச விடுதலைக் காகப் போராடிய காலனிய எதிர்ப்பு இயக்கமும் வைக்கம் சத்யாகிரகத்தில் ஒன்றாக இணைந்தது என்பதுதான். அதுவரை, மறுமலர்ச்சித் தலைவர்களும், சமூக அமைப்புகளும் தனித் தனியாகவே சீர்திருத்த இயக்கங்களை நடத்தி வந்தனர். ஆனால் வைக்கம் சத்யாகிரக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேசத்தின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுடன் கைகோர்த்தார்கள். எனவேதான் வைக்கம் சத்யாகிரகம் வரலாற்றில் முக்கியத்தும் பெற்றது.

> **மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு விஷயம் தொடர்பாக, சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு எந்த அதிகாரத்தை கொண்டு அனுப்பி வைக்கிறார்கள்? நமது கூட்டாட்சி ஆட்சியில், மாநிலப் பட்டியலில் இடம்பெறும் ஒரு விஷயத்தில் மாநிலச் சட்டம் செல்லுமா இல்லையா என்பதை பரிசீலிக்க குடியரசுத் தலைவருக்குக் கூட அதிகாரம் இல்லாதபோது, அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதன் மூலம், அரசியலமைப்பின் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உண்மையில் அவர்கள் வேண்டுமென்றே கைவிடுகிறார்கள். இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயலாகும்.**

#### தீண்டாமையை ஒழிக்க குழு!

சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் அரசியல் இயக்கங்கள் என இரட்டை தலைமையின் கீழ் சமூக அவலங்களுக்கு எதிராக இது போன்ற போராட்டம் வேறு எங்கும் நடந்ததாக எனக்கு தெரியவில்லை. ஸ்ரீ நாராயண குரு, சட்டம்பி சுவாமிகள், அய்யன்காளி போன்ற மறுமலர்ச்சித் தலைவர்கள் கலங்கரை விளக்கமாக இருந்து வழிகாட்டியிருக்காவிட்டால், கேரளாவில் இப்படி ஒரு முற்போக்கு இயக்கம் நடந்திருக்க வாய்ப்பில்லை. ஸ்ரீ நாராயண குரு வைக்கத்திற்கு சென்றார். அவர் தனது ஆசிரமத்தை சத்யாக்கிரக போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்காக திறந்துவிட்டார். தீண்டாமையை ஒழிக்க குழு ஒன்றும் அப்போது அமைக்கப்பட்டது

தெருவில் நடமாடும் சுதந்திரம் குடிமகனின் அடிப்படை உரிமை. ஆனால், நம் நாட்டில் அந்த காலத்தில் அதற்கு அனுமதி இல்லை. பெரும்பாலான மக்கள் பொது சாலைகளில், குறிப்பாக கோவில்களுக்கு அருகில் நடக்க அனுமதிக்கப்படவில்லை. தூய்மை மற்றும் தீண்டாமை பற்றிய கருத்துக்கள் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இது அடிப்படை உரிமையை மறுக்கும் செயல் என்பதால் உணர்வுபூர்மான எதிர்ப்பு எழுந்தது . வைக்கம் சத்யாகிரக போராட்டம் என்பது வர்ணாஸ்ரம தர்மம் என்ற மனித விரோத சாதி அமைப்புக்கு எதிரான ஒரு தெளிவான அறைகூவல் ஆகும். குருவாயூர் சத்யாகிரக போராட்டத்தின் மூலம் அது மேலும் முன்னேறியது. இந்தப் போராட்டங்கள் ஆலய நுழைவுப் பிரகடனத்துக்கு வழி வகுத்தது.

அந்த வகையில், வைக்கம் சத்யாகிரகம் நாடு முழுவதற்கும் முன்மாதிரியாக இருந்தது, அதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் ஆலயங்கள் மற்றும் பொது சாலைகளில் சுதந்திரமாக நடமாடுவது தொடர்பான பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. குருவாயூரைத் தவிர, புனே, நாசிக் மற்றும் பலவற்றிலும் வைக்கம் சத்யாகிரகத்தின் தாக்கத்தைக் காண முடியும்.

#### பெரியார் வருகையை பெருமையுடன் நினைவுகூர்வோம்!

வைக்கம் சத்தியாகிரகத்தின் பொதுவான பாரம்பரியம் குறித்து பெருமை கொள்ள, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கும் பொதுவான பல விஷயங்கள் உள்ளன என்பதை ஆரம்பத்திலேயே நான் தெளிவாகக் கூறினேன். சாதி அமைப்பு, ஆரிய ஆதிக்கம், பிராமண மேலாதிக்கம் ஆகிய தீமைகளை எதிர்த்து வீரத்துடன் போராடிய தந்தை பெரியார் என்ற அழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வைக்கத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சத்யாகிரக போராட்டத்தில் பங்கேற்க எங்களது மாநிலத்துக்கு வருகை தந்தார் என்ற வரலாற்று உண்மையை கேரளா எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்கிறது. உடல்நிலை குன்றிய நிலையிலும் போராட்டத்தில் கலந்துகொண்டு இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார். வீரம் செறிந்த வைக்கம் சத்யாகிரக போராட்டத்திற்கு பிறகு, ‘வைக்கம் வீரர்’ என்ற பட்டத்தைப் பெற்றார் என்பது நினைவுகூரத்தக்கது. வைக்கம் சத்யாகிரகம், தந்தை பெரியாரின் அந்தஸ்தை உயர்த்தியதோடு, மற்ற விஷயங்களில் தீர்க்கமான மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்ற உத்வேகமூட்டியது.

மறுமலர்ச்சி இயக்கங்கள் குறித்து மிகப் பெரிய பார்வையை மக்களிடத்தில் ஏற்படுத்தியதிலும் வரலாற்று எல்லைகளுக்குள் அவற்றை கொண்டு சென்றதிலும் தமிழகம் எங்களுடன் ஒன்றாகஇருந்ததுஎன்பதும்குறிப்பிடத்தக்கது. வைக்கம் சத்யாகிரகத்தில் சி ராஜகோபாலாச்சாரி, சீனிவாச ஐயங்கார், அய்யாமுத்து கவுண்டர் போன்றவர்களின் பங்களிப்பு அந்த போராட்டத்தின் போது ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்குவகித்தது.

#### வரும் நாட்களிலும் புது உற்சாகத்துடன் முன்னேறுவோம்!

இத்தகைய புகழ்பெற்ற போராட்டங்களின் பாரம்பரியத்தை கேரளாவும் தமிழ்நாடும் மக்களுக்காக பகிர்ந்து கொள்கின்றன. வரும் நாட்களிலும், அதே போன்று புது உற்சாகத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். வெவ்வேறு எண்ணங்களை கொண்டோர் பொதுவான ஒரு குறிக்கோளுக்காக, ஒரு பெரிய நோக்கத்திற்காக ஒன்றிணைய முடியும் மற்றும் ஒன்றிணைக்க வேண்டும். எதிர்காலத்திலும் இப்படிப்பட்ட ஒற்றுமை தேவை, அதை சகோதர உறவுகளுடன், உறுதியான சக்திகளுடன் மிகப்பெரிய அளவில் உருவாக்க வேண்டும் என்பதை வைக்கம் சத்யாகிரகம் நமக்கு ஒரு முன்மாதிரியான பாதையை காட்டியிருக்கிறது.

#### முன்மாதிரியான போராட்டம்

வைக்கம் சத்தியாகிரகம் மற்றொரு முன்மாதிரியையும் முன்வைத்துள்ளது. , சமூகக் கொடுமைகள் அல்லது ஒடுக்குமுறைகளுக்கு மட்டும் ஆளானவர்கள், அதற்கு எதிராகப் போராடுபவர்களாக இருக்கக் கூடாது. இத்தகைய தீமைகள் மற்றும் அடக்குமுறைகளின் மோசமான பலனை அனுபவிப்பவர்கள் கூட அதை எதிர்த்துப் போராட ஒன்றுபட வேண்டும் என்பதுதான் அது. கே.கேளப்பன், கே.பி. கேசவ மேனன், மன்னத்து பத்மநாபன், குரூர் நீலகண்டன் நம்பூதிரிபாட், டி.கே.மாதவன், டி.ஆர்.கிருஷ்ணசுவாமி ஐயர், கண்ணன்தொடத்து வேலாயுத மேனன் ஆகியோர் வைக்கம் சத்யாக்கிரகத்தின் முன்னணியில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இயக்கத்தை சுதந்திரப் போராட்டத்துடன் இணைப்பதில் டி.கே.மாதவன் போன்றோர் ஆற்றிய பங்கு குறிப்பிடத் தக்கது. காக்கிநாடாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சிறப்பு கூட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு மற்றும் ஆலய நுழைவு போராட்டத்திற்கு ஆதரவாக அவர் தீர்மானம் கொண்டு வந்தார். டி கே மாதவனுக்கு காந்தியடிகள் ஆதரவு அளித்தார். ஸ்ரீ நாராயண குருவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பிறகுதான் காந்தியடிகள் சத்யாகிரக போராட்டத்தை காணச் சென்றார். வைக்கம் சத்யாகிரகம் தொடர்பாக காந்தியடிகளின் முதல் கேரளா பயணம் அதுவாகும்.

#### காந்தியடிகளுக்கே அனுமதி மறுப்பு

காந்தியடிகள் வைக்கம் சென்றபோது,



அவர் ஒரு ‘அவர்ணன்’(பிற்படுத்தப்பட்டவர்) என்பதால், கோயிலின் நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த இந்தம்துருத்தி மன என்ற அமைப்பு ஆலயத்திற்குள் நுழைய அவருக்கு அனுமதி மறுத்தது. கோவிலை சுற்றியுள்ள பொது சாலைகள் அனைவருக்கும் திறக்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தபோது, கோயில் நிர்வாக அதிகாரிகளான, ‘சவர்ணாஸ்’ அதை செய்ய மறுத்து விட்டனர். இன்று, அந்த மனா (நிர்வாகம்) அன்றைய காலத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்ட பின்னணியில் இருந்து வந்த தொழிலாளர்களை கொண்டு நிர்வாக அலுவலகமாக செயல்படுகிறது. இறுதியில் வரலாறு எந்த திசையில் முன்னேறுகிறது, எப்படி முன்னோக்கி நகர்கிறது, எப்படி ஒரு முற்போக்கான திசையில் செல்கிறது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வைக்கம் சத்தியாகிரகத்தில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். அந்த வகையில், இது உண்மையிலேயே ஒரு மக்கள் இயக்கமாகும். கே.அப்துல் ரஹ்மான்குட்டி, பரீத் சாஹிப், எம்.கே.அப்துல் ரஹீம் மற்றும் பலர் இஸ்லாமிய சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒற்றுமையை வெளிப்படுத்தினர். ஜார்ஜ் ஜோசப் போன்றவர்கள் சத்யாகிரகத்தை ஏற்பாடு செய்வதில் திரைக்குப் பின்னால் முக்கிய பங்கு வகித்தனர். சீக்கிய மதத்தைச் சேர்ந்த சகோதரர்கள் வைக்கத்தில் ‘லங்கர்’ (பொது சமையல் கூடம்) கூட அமைத்தனர். எனவே, சத்யாகிரகம் உண்மையான மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருந்தது.

### சாதிய அமைப்பை எதிர்த்து வீரத்துடன் போராடியவர் தந்தை பெரியார்!

#### முற்போக்கான மாற்றம் தேவை

1865 ஆம் ஆண்டிலேயே, பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பொதுச் சாலைகளைப் பயன்படுத்த அனுமதிக்க திருவிதாங்கூர் சமஸ்தானம் முடிவு செய்தது. இன்னும், ஆறு தசாப்தங்களுக்குப் பிறகும், அந்த முடிவை நடைமுறைப்படுத்த ஒரு மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது. சிறந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அதை அடைய, சமூக பார்வையிலும் செயல்பாடுகளிலும் முற்போக்கான மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய மக்கள் இயக்கங்களும் தேவைப்படுகிறது. இதைத்தான் நமக்கு வைக்கம் சத்யாகிரகம் சுட்டிக் காட்டுகிறது.

#### சமூக மாற்றங்களை கொண்டு வந்த ஆளுமைகள்

அரசியல் இயக்கங்கள் இருந்தாலும் சமூக இயக்கங்களுடன் அவற்றுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்ற வாதத்தை உறுதிப்படுத்தும் போக்கு பொதுவாக உள்ளது. வைக்கம் சத்யாகிரகம் அந்த கருத்தோட்டத்தை நிராகரித்து விட்டது. இந்தியாவின் பெரும்பாலான சீர்திருத்த இயக்கங்கள் உயர்ந்த ஆளுமைகளின் விளைவாக வந்தவைதான். ராஜாராம் மோகன் ராய், ஈ.வெ. ராமசுவாமி நாயக்கர், ஜோதிபா பூலே, ஸ்ரீ நாராயண குரு மற்றும் பலர் நாட்டில் சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதில் நிச்சயமாக பெரும் பங்கு வகித்துள்ளனர். இருப்பினும், வைக்கம் சத்தியாகிரகம் ஒரு தனி நபரைச் சுற்றி வரவில்லை. சமூக, அரசியல் இயக்கங்களில் ஈடுபட்ட அனைவரின் கூட்டு முயற்சியே அதன் வெற்றியை உறுதி செய்தது.

#### மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரிய அரசுகள்

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கங்களின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்ற அரசியல் அமைப்புகளே இன்று தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களிலும் ஆட்சியில் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரியார், அண்ணா தலைமையில் இருந்த திராவிட இயக்கம், கலைஞர் போன்றவர்களால் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைந்துள்ளது. இந்தப் பெருமைக்குரிய மரபை தமிழகத்தில் திமுக அரசு முன்னெடுத்துச் செல்கிறது. கேரளாவில், நமது மறுமலர்ச்சி இயக்கங்களின் உள்ளடக்கம் மற்றும் நிலைத்தன்மை போன்ற விழுமியங்களை உள்வாங்கி, நவீன கேரளாவை உருவாக்க இடதுஜனநாயக முன்னணி அரசு முயற்சிக்கிறது. வைக்கம் சத்யாகிரகத்தின் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் இந்த இரண்டு அரசியல் அமைப்புகளும், அவர்கள் தலைமையிலான அரசுகளும் ஒன்று கூடுவது மிகவும் பொருத்தமானது.

100 ஆண்டுகளுக்கு முன்பு, சமுதாயத்தின் பெரிய நலன்களை நிறைவேற்ற செய்யச் வைக்கம் சத்தியாகிரகம் நடத்தப்பட்டது. நமது வரலாறு, மொழி, கலாச்சாரங்கள், மதச்சார்பின்மை, கூட்டாட்சி, ஜனநாயகம் மற்றும் அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுள்ள அரசியலமைப்பு ஆகியவற்றைப் பாதுகாக்க, நாட்டின் மிகப்பெரிய நலன்களுக்காக ஒன்றுபட வேண்டிய காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சமூக மற்றும் அரசியலில் வெவ்வேறு கொள்கைகளை உடையவர்கள் பொது நலனுக்காக ஒன்றிணைந்த ஒரு இயக்கத்தை பற்றி நாம் நினைவுகூரும்போது, நமது காலத்திற்கு பொருத்தமான பொது நன்மையை அடைய நாமும் இதுபோன்ற இயக்கங்களை ஒன்றிணைக்க பாடுபடுவது கட்டாயமாகும்.

#### பொதுநலன்களுக்காகப் போராடுவோம்

அப்போதுதான் சாதிவெறி, தீண்டாமை, சமூகத் தீமைகள், மூடநம்பிக்கைகள், மனிதாபிமானமற்ற சடங்குகள் போன்றவற்றுக்கு எதிரான போராட்டம் கூர்மையடையும். இன்றும் கூட இத்தகைய பிற்போக்கு சிந்தனைகள் மற்றும் நடைமுறைகளை பிரதான நீரோட்டத்தில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மதம், மாநிலம் போன்றவற்றின் அடிப்படையிலும் நம்மை பிரிக்கும் முயற்சிகள் நடக்கின்றன. நாம் போராடி சுதந்திரம் அடைந்தாலும், இன்று நமது இறையாண்மைக்கு சவால் விடும் பொருளாதார உறவுகளுக்கும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கும் தள்ளப்பட்டுள்ளோம். இவை அனைத்திற்கும் எதிராக பொதுநலன் கருதி போராட வேண்டும். பொறுப்புள்ள அரசியல் அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் என்ற முறையில் காலம் அதை நம்மிடம் கோருகிறது.

#### மதவாத அரசால் மாற்றியமைக்கப்படும் விழுமியங்கள்

நமது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அது நிலைநாட்டும் மதிப்புகள், நமது புகழ்பெற்ற சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உருவான விழுமியங்கள் மீது கடுமையான தாக்குதல் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வைக்கம் சத்யாகிரகத்தின் மதச்சார்பற்றதன்மைபற்றிகுறிப்பிட்டிருந்தேன். இது நமது சுதந்திரப் போராட்டத்தின் மிகவும் போற்றுதலுக்குரிய மதிப்புகளில் ஒன்றாகும். இது நமது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். எவ்வாறாயினும், நமது மதச்சார்பற்ற அரசியல் ஒரு மதவாத அரசால் மாற்றியமைக்கப்படுகிறது. நமது அரசியலமைப்புச் சட்டம் மனுஸ்மிருதியால் மாற்றப்பட முயற்சிகள் நடக்கின்றன. நமது கூட்டாட்சி அமைப்பு ஒற்றையாட்சி அமைப்பாக மாற்றப்பட்டு வருகிறது.

### மாநில அரசுகளின் அதிகாரங்களைத் தகர்க்கும் ஆளுநர்கள்!

மதச்சார்பற்ற, சோசலிச, ஜனநாயக, சுதந்திரமான, இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டு, பலப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, இதுபோன்ற மோசமான அனைத்து முயற்சிகள் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும், அவற்றிற்கு எதிராகப் போராட வேண்டும்.

கடந்த காலங்களில் இதே போன்ற பிரச்சனைகளை நாங்கள் எதிர்கொண்டோம். அந்த நேரத்தில், நாங்கள் அதை எதிர்கொண்டு ஒன்றாக நின்று வென்றோம். தற்போதும், இதே போன்ற பிரச்சனைகளை நாம் எதிர்கொள்கிறோம். இந்த நேரத்தில் இந்த சக்திகளால் ஏற்படும் நெருக்கடியை நாம் கைகோர்த்து நின்று எதிர்ப்பதில் உறுதியாக உள்ளோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் அதிகாரங்களை தகர்ப்பதற்காக ஆளுநருக்கு உரிய அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

#### ஆளுநர்களின அதிகார அத்துமீறல்

மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு விஷயம் தொடர்பாக,சட்டமன்றத்தால்நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு எந்த அதிகாரத்தை கொண்டு அனுப்பி வைக்கிறார்கள்? நமது கூட்டாட்சி ஆட்சியில், மாநிலப் பட்டியலில் இடம்பெறும் ஒரு விஷயத்தில் மாநிலச் சட்டம் செல்லுமா இல்லையா என்பதை பரிசீலிக்க குடியரசுத் தலைவருக்குக் கூட அதிகாரம் இல்லாதபோது, அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புவதன் மூலம், அரசியலமைப்பின் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உண்மையில் அவர்கள் வேண்டுமென்றே கைவிடுகிறார்கள். இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயலாகும்.

ஒரு மாநிலச் சட்டம், பொதுப் பட்டியலில் உள்ள ஒரு விஷயத்தைத் தொடும். மத்திய சட்டத்தில் உள்ள எந்த விதிகளையும் மீறாமல் இருக்கும் வரை, வேறுவிதமாகக் கூறினால், மத்திய சட்டத்தின் அம்சங்களுக்குள் நுழையாத பட்சத்தில், மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அத்தகைய மசோதாக்களை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஆளுநரால் அனுப்ப முடியாது. இந்த மசோதாவில் அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணாக ஏதும் இருப்பதாக ஆளுநர் கருதினாலும், அந்த மசோதாவை தனது கருத்துக்களுடன் மீண்டும் சட்டமன்றத்திற்கு அனுப்புவதே ஆளுநருக்கு உள்ள ஒரே வாய்ப்பு.

#### நீதிமன்ற அதிகாரங்களை ஆக்கிரமிக்கும் ஆளுநர்கள்

**இது தொடர்பாக, ஒரு சட்டத்தை அரசியலமைப்பு ரீதியாக தீர்மானிக்கும் இறுதி அதிகாரம் இந்த நாட்டில் உள்ள அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இந்த உண்மையை மறந்துவிட்டு, இந்த நாட்டில் ஆளுநர் பதவியை வகிக்கும் சிலர், அரசியல் சாசனத்தால் சட்டப்பூர்வமாக நீதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள துறைகளை ஆக்கிரமித்து வருகின்றனர்.**

**ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியலமைப்புச் சட்டம் சரியாகப் பிரித்து வைத்துள்ள அதிகாரங்கள், ஆளுநரைப் போன்ற ஒரு நியமன அதிகாரியின் தலையீட்டை அனுமதிக்கும் பட்சத்தில், நாட்டில் ஜனநாயக அரசியல் நிலவுவதைப் பற்றி சிந்திப்பது பயனற்றதாக இருக்கும். இந்த நாட்டில் அரசியலமைப்பின் கீழ் செயல்படும் எந்த ஆளுநருக்கும் தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட மசோதாக்களை காலவரையின்றி வைத்திருக்கும் அதிகாரமோ உரிமையோ கிடையாது. இது நன்கு நிறுவப்பட்ட சட்டத்தின் நிலைப்பாடு என்று உச்ச நீதிமன்றத்தால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

**சட்டத்தின் இந்த நிலைப்பாட்டை உச்சநீதிமன்றம் அவ்வப்போது நினைவுகூறும் போதும் ஜனநாயக செயல்முறைக்கு குந்தகம் விளைவிப்பதை மறைமுக நோக்கமாக கொண்ட ஆளுநர்கள், மசோதாக்களை பரிசீலிக்காமல் அவற்றை முடக்கி வைக்கிறார்கள்.அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.**

#### கேரள ஆளுநரின் பழிவாங்கும் செயல்!

கேரள மாநிலத்தில், ஆளுநர் தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட எட்டு மசோதாக்களை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் போட்டுள்ளார். ஆளுநரின் இத்தகைய செயலற்ற தன்மையை நீதிமன்றத்திற்கு கேரள அரசு கொண்டு சென்ற போதுதான் அந்த எட்டு மசோதாக்களில் ஒரு மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தார், மீதமுள்ளவற்றை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பினார். ஆளுநர் தனது சட்ட விரோத செயல்களை தெரிந்தே செய்கிறார் என்பது தெளிவாகிறது. அதையும் மீறி, அவர் அவ்வாறு நடந்துகொள்வதுஎன்பது அவரது அரசியல் பழிவாங்கலை மட்டுமே காட்டுகிறது. நாட்டு மக்கள் இத்தகைய பழிவாங்கும் செயல்களை திறம்பட எதிர்கொண்டு தோற்கடிப்பதில் வல்லவர்கள் என்பதை அதிகார மையங்கள் நினைவில் கொள்வது நல்லது.

வைக்கம் சத்யாகிரகத்தின் இந்த நூற்றாண்டு விழா, இந்த முன்னோக்கிய பயணத்தில் புத்துணர்ச்சியையும் வலிமையையும் அளிக்கும்.

இவ்வாறு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் அவ்வுரையில் குறிப்பிட்டிருந்தார்.

## தென் மாவட்ட மழை வெள்ளத்திலும் பா.ஜ.க.வினர் அரசியல் செய்கிறார்கள்!

# தமிழ்நாடு அரசு மக்களை மீட்க பெரு முயற்சியுடன் செயல்பட்டது!

## சன் நியூஸ் 'கேள்விக் களம்' பகுதியில் மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் கே.கனகராஜ் ஆணித்தரம்!

சென்னை, டிச. 30 -

**சன் நியூஸ் தொலைக்காட்சியில் "நிவாரண நிதி கோரிக்கையை திசை திருப்பும் ஒன்றிய அரசு? பேரிடரிலும் அரசியல் கொந்தளிக்கும் எதிர்க்கட்சிகள் வெள்ளச் சேத ஆய்விலும் தமிழ்நாடு அரசை விமர்சித்த நிர்மலா சீதாராமன்" என்ற தலைப்பில் நடைபெற்ற 'கேள்விக் களம்' பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர்களில் ஒருவரான கே.கனகராஜ் விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:**

இங்கே பேசியவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். கடைசி வருடம், 2021-2022 ஆண்டு, ஜி.எஸ்.டி. வரியில் 59 சதவிகிதம். ஜி.எஸ்.டி.யில் ஒன்றிய அரசின் பங்களிப்பு என்ன இருக்கு? நமது மக்கள் தானே பொருட்களை வாங்குகிறார்கள். அந்த வரி தானே உடனுக்குடன் கொடுக்கிறார்கள். பெரிய நிறுவனங்கள் ஏப்ரல் 1-ஆம் தேதி சம்பாதிக்கின்ற லாபத்திற்கும் சேர்த்து அடுத்த வருடம் மார்ச் 31-ஆம் தேதி கட்டினால் போதும், ஆனால் நாம் ஏப்ரல் 1-ஆம் தேதி வாங்கும் பொருள்களுக்கும் வரி கட்டுகிறோம்.

நிர்மலா சீதாராமன் நாட்டினுடைய முக்கியமான அமைச்சர். அவர் "புள்ளி இரண்டு சதவிகிதம் எனக்குச் சொல்லவில்லை, அதனால் கெட்டுப்போச்சு என்று சொல்கிறார்கள்" என்று கூறினார்.

ஒரே ஒரு விஷயத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், அல்லது தங்கம் தென்னரசு இவர்கள் எல்லாம் சொன்னால் நிர்மலா சீதாராமன் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒருத்தர் சொல்லி இருக்கிறார்.

The None of the weather predection models anticipated the 90 cm rainfall witnessed in kayalpatinam municipality in tuticorin district of tamilnadu last week அப்படி என்று சொல்லிட்டு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்

The ministry of earth sciences plans to setup two high performance computers in Noida and Pune to enhance the weather forecasting accuracy.

ஆனால், துல்லியமாக சொன்னார்கள் என்று நிர்மலா சீதாராமன் கூறினார். புள்ளி இரண்டு சதவிகிதம் வேறுபாடு இருந்து அதற்காக தமிழ்நாடு அரசு அங்கலாய்த்ததாக கூறியது நிர்மலா சீதாராமன் கூட விமர்சிக்கிறார்.

இன்றைக்கு இதனை அறிவியல் துறையின் முன்னாள் செயலாளர் எம். ரவிச்சந்திரன் கூறியுள்ளார். அந்தக் கூட்டத்தில் ஒன்றிய புவியியல் துறை அமைச்சர் கிரன் ரிஜிஜுவும் கலந்துகொண்டிருக்கிறார். இப்போது திருமதி நிர்மலா சீதாராமன் மன்னிப்பு கேட்க வேண்டும்.

கட்டாயமாக கோவிலில் வேலை செய்கின்ற எல்லோருக்கும் நியாயமான சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. அதில் ஏதாவது இருந்தால் நாங்கள் தான் முதலில் சங்கம் வைப்போம்.




ஆனால் 'உண்டியலில் போடாதே, தட்டில் போடு' என்பதை வேறு யாராவது சொல்லி இருந்தால் என்ன சொல்லி இருப்பார்கள். நான் கேட்பது 'எனக்கு கொடுக்கவில்லை, எனவே நீங்கள் ஒன்றிய அரசாங்கத்திற்கு வரி கொடுக்காதீர்கள்' என்று சொன்னால் அதனை விட்டு விடுவீர்களா? ஒரு முக்கியமான பொறுப்பில் இருக்கக்கூடிய ஒருவர், அவர் உண்டியலில் போடாதே தட்டில் போடு என்று சொன்னால் இப்படி ஒரு கோரிக்கை வைத்தால் இது எப்படி இருக்கிறது?

நிர்மலா சீதாராமன் எதற்காக இங்கு வந்தார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மேல் நிறைய விமர்சனம் வந்தபிறகு ஏதோ கரிசனத்தோடு சொல்வார்கள் என்பதற்காக வந்தார். மற்றபடி அவர்கள் வருவதற்கான அடிப்படையான காரணங்கள் எதுவுமில்லை.

ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் இங்கே வந்து எல்லா ஆலோசனைகளை செய்துவிட்டுப் போய்விட்டார்.

அதேபோல தமிழிசை சௌந்தரராஜன், அவர் இங்கே வந்து அவர் வடித்த கண்ணீர், ஏற்கனவே வந்த மழைத் தண்ணீரை விட அதிகமாகப் போய்விட்டது.

புதுச்சேரியில் நான் ரேஷன் அரிசிக்கு பதிலாக காசு தருகிறேன். அது நல்ல மாடல் என்று சொல்லி, பத்து மாதம் காசு கூட ஒரு பைசா கூட கொடுக்கவில்லை. பெரிய போராட்டம் செய்த பிறகு நான்கு மாதம் கொடுத்தார்கள். இந்த மாதப் பணம் இதுவரை வரவில்லை. தமிழிசை சௌந்தரராஜன் தான் நிர்மலா சீதாராமனிடம் சென்று அழ வேண்டும்.

அடுத்து 'காசு மெல்ல கொடுப்போம், மெல்ல கொடுப்போம்' என்று சொல்கிறார்கள். இந்த மாதத் துக்கு கொடுத்தார்கள். உடனே கொடுத்தார்கள். ஆனால் இன்டர் மினிஸ்ட்ரியல் டீம் சென்று பார்த்துட்டு கொடுத்தார்கள். அவர்கள் ரிசர்வ் பேங்குக்கு ஒரு லட்டர் அனுப்பி இருக்கிறார்கள். 2020, 21, 22இல் கொடுத்ததை இந்த வருடம் தான் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்த வருடம் லோக் சபாவில் கேள்வி நம்பர் 4591 தேதி 28.3.2023 என்.கே.பிரேமசந்திரனுக்கு பதிலில், அந்த டீம், வந்த பிறகு தான் கொடுக்கனும். ஆனால், என்.டி.ஆர்.எப். இல் இருந்து கொடுக்கலாம் என்று அதில் இருக்கிறது.

பொதுவாக டீம் வரும்; பணம் கொடுப்பாங்க; ஆனால் ஸ்டேட் கவர்ன்மெண்டிடம் போதுமான பண்ட் இல்லை என்றால் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் என். டி.ஆர்.எப்.பில் இருந்து அட்வான்சா பணம் கொடுக்க வேண்டும். ஐ.எம்.சி.டி.க்காக காத்திருக்கக் கூடாது. உள்ளூர் மட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் அவர்கள் பாதிப்பிலிருந்து வெளியே வருவதற்கு இந்தப் பணத்தை கொடுக்கலாம் என்று அவர்கள் அதில் சொல்லி இருக்கிறார்கள்.

நிர்மலா சீதாராமன், வந்தார், பார்த்தார், நேற்று கூட 'இரண்டரை லட்சம் பேருக்கு உடனே விவசா யத்திற்கு காப்பீட்டுத்தொகை கொடுத்து விடுங்கள்' என்று.

அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, விவசாயம் என்பது வெறும் பயிர் மட்டும் அழிந்துவிடவில்லை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள், தண்ணீர் ஆற்றை கடந்து போகின்ற போது நிலத்தில் இருந்து அந்த வண்டல் மண்ணையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. திரும்பி வரும்போது மணலைக் கொண்டு வந்து கொட்டிவிட்டது. அடித்துக் கொண்டு போன இடத்திலும் மணலை போட வேண்டும். திரும்ப சேர்த்த மணலையும் வெளியே எடுத்து விட்டுப் போட்டால் மட்டும் தான் நிலத்தைப் பாதுகாக்க முடியும்.

வீடுகளை நாம் பார்க்கும்போது டி.வி., பிரிட்ஜ், போர்வை, துணி, சாப்பாட்டுக்கு வைத்திருந்த பொருள்கள், கால்நடை, வாகனம் எல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டன.

வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நிர்மலா சீதாராமன் ஒரு பவர் புல் போஸ்டிங்கில் இருக்கிறார். நம்பிமம் கூறிய அதே பாடி லாங்வேஜோடு, அப்பா நீங்கள் கொடுத்த பொருள்கள் எல்லாம் இப்படி வெள்ளத்தில் போய் விட்டது. நீங்கள் என்ன செய்யலாம் என்றால் கார்ப்பரேட் சோஸியல் ரெஸ்பான்சிபிலிட்டி என்று வைத்து இருக்கிறீர்களே பண்ட், இவர்கள் தான் உங்களுக்கு லாபம் சம்பாதித்து கொடுக்கிறார்கள். அதில் ஒரு பகுதியை ஒதுக்கி நஷ்டஈடா கொடுங்கள் என்று சொல்லலாம்.

தமிழ்நாட்டில் யாராவது, பா.ஜ.க.வினர் நிர்மலா சீதாராமனிடத்தில் ஒரு பைசாவாவது உடனடியாக கொடுங்கள் என்று கேட்டார்களா? இல்லை! ஆனால் எடப்பாடி பழனிச்சாமி மாநில அரசுக்கு நிதி கொடுங்கள் என்று கேட்டிருந்தார். ஒன்றிய அரசு நிதி கொடுக்காதது தவறு தான். வாய்ப்பு இல்லை என்று நிர்மலா சீதாராமன் கூறுகிறார்.

இந்தியாவில் புயல் பாதிப்பு வரும் என்ற அறிவிப்பு அறிவித்த உடனேயே 14, 15 ஆகிய இரண்டு தேதிகளில் ஒரு மாத காலத்தில் குழந்தை பிறக்கும் என்று வாய்ப்பு இருக்கக்கூடிய பதிவு செய்திருக்கக்கூடிய பெண்கள் அனைவரையும் அழைத்து வந்து மருத்துவ மனையில் சேர்த்தது மாதிரி ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை இந்தியாவிலேயே வேறு எங்கேயும் நடந்ததில்லை. தமிழ்நாட்டில் தான் இது நடந்து இருக்கிறது.

கொள்கைப் பிரச்சினையில் கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் நாங்கள் நியாயத்திற்காக குரல் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம். வேலை நேரம் மாற்றத்தில் கூட நாங்கள் குரல் கொடுத்தோம். ஆனால் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் அரசியலுக்காகக் கூட குரல் கொடுக்கவில்லை.

நான் இந்த மழை பெய்து முடிந்து பிரச்சினை என்று வந்த உடனே திருநெல்வேலியில் இருந்தேன். அதிகாரிகள் அமைச்சர்கள் கீழே நின்றார்கள். ஆனால், அவ்வளவு நின்ற பிறகும் மக்கள் பரிதாபமாக பாதிக்கப்பட்டார்கள். ஏன் என்றால் வெள்ளம் அந்த அளவிற்கு அதிகமாக இருந்தது.

கையில் உணவு இருக்கிறது; எதிரே பசித்தவர்கள் இருக்கிறார்கள்; கொடுக்க முடியவில்லை. டைரக்டர் மாரிசெல்வராஜ் குடும்பத்தினர் பாதிக்கப்படுகிறார்கள். அமைச்சர் எங்கே இருக்கிறார் என்று கேட்டு இவர்கள் எல்லாம் ஏற்பாடு செய்த பிறகும் அவர்களை மீட்க முடியவில்லை. உங்களுக்குத் தெரியும் ரயில் இருந்தது. ஆனால் அவர்களுக்கு சாப்பாடு கொடுப்பதற்கு முடியவில்லை. அத்தனை பேரும் சேர்ந்தும் செய்யமுடியாத சில காரியங்கள் இருந்தன. ஆனால் இதற்கெல்லாம் அரசோ, மற்ற அதிகாரிகளோ குறைந்து போனார்கள் என்று சொல்ல முடியாது.

முழங்கால் அளவு தண்ணீரில் ஒரு நர்ஸ் உட்கார்ந்து ஏரலில் பிரசவம் பார்த்து இருக்கிறார். அதற்குப் பின்னால் மூன்று நாள் அங்கேயே இருந்தார். கழுத்தளவு தண்ணீரில் ஒருவர், அவர்களுக்கு வேண்டியதை கொண்டு போய் கொடுத்து இருக்கிறார்கள்.

எனவே என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் சரியாகவே நடந்தது. அமைச்சர்கள் அதிகாரிகள் களத்தில் இருந்தும் வெள்ளத்திற்கு முன் ஈடுகொடுக்க முடியவில்லை. அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் மாட்டிக்கொண்டார். தூத்துக்குடி ஆட்சியர் தண்ணீரில் மாட்டிக்கொண்டார். இவர்கள் எல்லாம் அதனை எதிர்பார்க்காமல் நடந்துவிட்டன.

ஒன்றை மட்டும் சொல்கிறேன், மாநில அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்தார்கள் என்பதுதான் உண்மை. எனவே ஒன்றிய அரசாங்கம் இப்போதாவது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பா.ஜ.க. அந்தக் கட்சியினர் எதையாவது கொஞ்சம் சேர்த்து வைத்தார்கள் என்றால் அவற்றையெல்லாம் நிர்மலா சீதாராமனும், தமிழிசை சௌந்தரராஜனும் அழித்து விட்டார்கள். இந்த அரசியலில் தி.மு.க.விற்கு இலாபம் தான். ஆனால் இதில் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதினால் தான் ஒன்றிய அரசு உடனடியாக நிதி வழங்கிட வேண்டும் என்று திரும்ப திரும்ப கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கே.கனகராஜ் அவர்கள் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

---

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

## ரூ.2.78 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகள்!

### போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்!

பெரம்பலூர், டிச. 30 -

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.2.78 மதிப்பீட்டில் பல்வேறு பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

அப்போது அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

அதனடிப்படையில் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல மக்கள் நலத்திட்டங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஜல் ஜீவன் மிசன் திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் ரூ.1.29 கோடி மதிப்பிலான 07 வளர்ச்சித் திட்டப் பணிகளும், சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பல்வேறு இடங்களில் ரூ.77.95 லட்சம் மதிப்பிலான 17 வளர்ச்சித் திட்டப் பணிகளும், கீழப் பெரம்பலூர் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் தெருவில் பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ. 23.50 லட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2.30 கோடி மதிப்பிலான 25 வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல அகரம் சீகூர் ஊராட்சிக்குட்பட்ட வயலூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.17.43 லட்சம் மதிப்பீட்டில் வயலூர் பால் உற்பத்தியாளர்கள் சங்க கட்டிடம் மற்றும் அத்தியூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.31.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அத்தியூர் தொடக்கப்பள்ளி கட்டிடம் என மொத்தம் ரூ.48.43 லட்சம் மதிப்பீட்டில் 02 பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார்.

---

## மரக்காணத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

### அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்தார்!

மரக்காணம், டிச. 30 -

மக்களுடன் முதலமைச்சர் இருக்கின்ற காரணத்தால் விண்ணப்பம் செய்தவர்கள் முதலமைச்சரிடம் மனு கொடுத்துள்ளதாக தன்னம்பிக்கையுடன் மக்கள் இருப்பதாக மரக்காணத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை அமைச்சர் செஞ்சிமஸ்தான்தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சி, நகராட்சிகளில் மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் முகாம்நடைபெற்று வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பேரூராட்சி சார்பில் மக்களுடன் முதல்வர் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் மரக்காணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. திண்டிவனம் சப் கலெக்டர் திவ்யான்ஷு நிகம் தலைமை தாங்கினார். மரக்காணம் பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார் முன்னிலை வகித்தார்.

பேரூராட்சி செயலாளர். முருகன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் மக்கள் குறை தீர்க்கும் முகாமினை தொடங்கி வைத்தார்.

இதைதொடர்ந்து முகாமில் எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை, வருவாய், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, காவல் மற்றும் மாற்றுத்திறனாளிகள்நலத் துறை, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நலன் உள்ளிட்ட துறையிலிருந்து அரசு அதிகாரிகள் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது கணினி மூலம் பதிவு செய்தனர். இதைத் தொடர்ந்து மரக்காணம் பேரூராட்சி தி.மு.க. இளைஞரணி நிர்வாகி வெங்கட்ராமன் சாலை விபத்தில் உயிரிழந்தார். இல்லத்திற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று அவருடைய திரு உருவப்படத்திற்கு மலர் மரியாதை செலுத்தி அவரது குடும்பத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் 25 ஆயிரம் நிதி உதவி வழங்கி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.



கோவை மாவட்டம் சூலூர் தாலுக்கா பட்டணம் ஊராட்சியில் நடைபெற்ற 'மக்களுடன் முதல்வர்' முகாமை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தொடங்கி வைத்தார். பட்டணம் ஊராட்சி மன்ற தலைவர் கோமதி செல்வக்குமார் குத்து விளக்கு ஏற்றினார், இவ்விழாவில் இலக்கிய அணி செயலாளர் பட்டணம் செல்வகுமார், சூலூர். வட்டாட்சியர் நிலத்தில் வள்ளி, ஒன்றியக் குழு உறுப்பினர் ரகு துரைராஜ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம்.ஆர். சபாபதி

**டிசம்பர் 30 (2009)**



சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

'தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.12.2023) சென்னையில் உடல்நலக் குறைவால் மறைவெய்திய தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர், கேப்டன் விஜயகாந்த் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உள்ளனர்.



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவையடுத்து, கோயம்பேட்டில் வைக்கப்பட்டிருந்த அவருடைய உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுதத்தி தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட குடும்பத்தினர் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகளுக்கு ஆறுதல் தெரிவித்தார்.





தூத்துக்குடி தொகுதி நட்டாத்தியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத்தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து குறைகளை கேட்டறிந்து நிவாரண உதவிகளை வழங்கினார். அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உள்பட அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



‘உடன்பிறப்புகளாய் இணைவோம்! தமிழர்களாய் தலைநிமிர்வோம்’ புதிய உறுப்பினர்கள் சேர்க்கையைத் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் பலனாக திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞர்களும், பொதுமக்களும் கழகத்தில் தங்களை உடன்பிறப்புகளாய் இணைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கான உறுப்பினர் அட்டைகளை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை மேலாளர் ஜெயக்குமார் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.




# உடன்பிறப்பே... 38

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த உடுமலை ப.நாராயணன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# உடுமலை ப.நாராயணன் : எளிமை எரிமலை!

நாள் : 1958-ஆம் ஆண்டு, ஜூலை 5-ஆம் தேதி

இடம் : கோவை - காட்டூர்

நிகழ்வு : கோவை மாவட்ட தி.மு.கழக 3-வது மாநாடு

ஒன்றிய அரசு தென்னகத்திற்குச் செய்திடும் அநீதிகளைச் சித்தரிக்கும் காட்சிகள் இடம்பெற்ற டிராக்டர் பின் தொடர, 2 ஆயிரம் சைக்கிள்கள், பல மோட்டார் சைக்கிள்கள் என முன்னே வர, நடுவில் திறந்த காரில் மாநாட்டுத் தலைவர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி, மாநாட்டுத் திறப்பாளர் ஆர்.தர்மலிங்கம் என கழகத்தின் முன்னோடிகள் வருகிறார்கள். இருமருங்கிலும் கூடி நின்று மக்கள் கூட்டம் பூக்கள் தூவி, வாழ்த்தொலி முழங்குகிறது. தலைவர்கள் கையசைத்துக் கொண்டே வர, அவர்களுக்கெல்லாம் முன்னே வழிநடத்திச் சென்று கொண்டிருந்தார் மாவட்டச் செயலாளர் ப.நாராயணன். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரும் அவர்தான்.

அவரது வரவேற்பு உரையில் “கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் மாறுதல்கள் ஏராளம். அந்த மாற்றங்களில் எல்லாம் பெரும் மாற்றமாக கழகம் கண்டுள்ள வளர்ச்சி, அதில், கோவை மாவட்டம் என்றுமே தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் மற்றெல்லா மாவட்டங்களுக்கும் கிஞ்சித்தும் பின்தங்கியது அல்ல என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” எனத் தனது உரையைத் தொடங்கினார், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பிகளில் ஒருவரான உடுமலை ப.நாராயணன்.

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், கடைசிவரை அவர் உடுமலைப்பேட்டை யில் வாடகை வீட்டில்தான் குடியிருந்தார்.**

கழகம் முகிழ்ந்தெழுந்து வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் தங்களது உயிர், பொருள், ஆற்றலை அளித்த முன்னோடிகளில் உடுமலை ப.நாராயணன் தனித்த அடையாளம் கொண்டவர்.

## எளிமையும் எரிமலையும்...

கதர் சட்டை, கதர் வேட்டி என எளிமையே அவர் அடையாளம். ஆனால், கழகத்தின் பணிகள் எனில், அவர் களம் காணும் ஏறு. ‘எரிமலை’ எனப் பெயர் எடுத்தவர். இராஜபுத்திர சிங் சமூகத்தைச் சேர்ந்த நாராயணன் அவர்களின் குடும்பத்தினர் அரசியல் பின்னணி கொண்டவர்கள். இவரது தந்தை திராவிட இயக்கத்தின் மீது பற்றுகொண்டவர் என்றால், சித்தப்பா ஜோதிநாத் சிங், கோயம்புத்தூர் மாவட்ட கம்யூனிஸ்ட்டுக் கட்சித் தலைவராகச் செயல்பட்டவர். இப்படியான பின்புலம் காரணமாக, இளம் வயதிலேயே அரசியல் பற்று கொண்டவராக நாராயணன் உருவானார்.

## மாவட்டப் பொறுப்பு

திராவிடர் கழகத்தில் பற்றுகொண்டு இயங்கி வந்த நாராயணன், கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே அடிப்படை உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டார். 1955-ஆம் ஆண்டு நடைபெற்ற கழக அமைப்புத் தேர்தலில் ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்வானார். பின்னர் மாவட்டச் செயலாளர் பொறுப்பும் அவரைத் தேடி வந்தது. தன்னலமற்று செயலாற்று பவர்களுக்கு கழகத்தின் முக்கியப் பொறுப்புகள் வந்து சேரும் என்பது பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே, கழகம் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்பிருந்தே தொடர்ந்து வரும் வழக்கம் என்பதற்கு நாராயணன் அவர்களின் பொறுப்பு உயர்வுகளே சான்றாகும்.

## ஆணையிட்ட நேரத்தில்...

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம், 1957 ஆம் ஆண்டு நடத்திய அனைத்துக் கட்சிப் போராட்டம், 1958 ஆம் ஆண்டு அஞ்சலக முற்றுகைப் போராட்டம் என அனைத்துப் போராட்டக் களங்களிலும், “ஆணையிட்ட நேரத்தில் மற்றவர்களை மிஞ்சா விட்டாலும்-குறைந்து நிற்க வில்லை” என அவர் சொற்களிலேயே அவரது களப்பணிகளைச் சுட்டிக்காட்டலாம். 1964 ஆம் ஆண்டு சட்ட நகல் எரிப்புப் போராட்டத்துக்குப் பெயர் அளித்துவிட்டு, குடும்பத்தில் ‘சொல்லிக்கொண்டு’ பிரிந்தனர் கழகத்தின் தீரர்கள். கோவையில் சட்டநகல் எரித்து கைதானவர்களில் நாராயணனும் இருந்தார்.

ஒருமுறை ஓமந்தூர் ராமசாமி அவர்கள், கோவையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது, தந்தை பெரியாரை இழிவுபடுத்தும் வகையில், அவரது பேச்சு இருந்தது. அந்தக் கூட்டத்தை கவனித்துக் கொண்டிருந்த நாராயணன், அதற்கு மேல் ஓமந்தூராரைப் பேச விடவில்லை. அந்தக் கூட்டத்தையே நடக்கவிடாமல் செய்தார் என்கின்றன, சில குறிப்புகள்.

## துருப்புச் சீட்டு

1962 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலின்போது பொள்ளாச்சியில் இருந்து தேர்வானவர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்ரமணியன். அதன் பின்னர் 1967 ஆம் ஆண்டிலும் பொள்ளாச்சி தொகுதியில் அவர் நிற்கத் திட்டமிட்டார். அவரை எதிர்த்து, பேரறிஞர் அண்ணா களம் இறக்கிய துருப்புச் சீட்டு நாராயணன். தேர்தலுக்கு முன்னர் ஒரு மேடையில், சி.சுப்ரமணியன் அவர்களை வென்று காட்டுவேன் என சவால் விட்டார் நாராயணன். அது தொடர்பாக, பத்திரிகையாளர்கள் சி.சுப்ரமணியன் அவர்களிடம் கேட்கிறார்கள்,

‘தி.மு.க. வேட்பாளரான ப.நாராயணன் உங்களை வென்று காட்டுவேன் என்கிறாரே?’ என்கின்றனர். அதற்கு அவர், “உடுமலை நாராயணன் என்ன? அந்த வைகுண்ட ராஜனே வந்தாலும், நான்தான் வெற்றிபெறுவேன்”என்றார். ஆனால், கழகத்தின் அலை, உதயசூரியன் சின்னத்தின் வெற்றி வெப்பம் தாங்காமல், கடைசிநேரத்தில் கோபி தொகுதியில் நின்றார் சுப்ரமணியன். ஆனால், அங்கும் கழக வேட்பாளர் பி.ஏ.சாமிநாதனிடம் அவர் தோற்றார் என்பது வரலாறு.

இப்படி, ஈரோடு, திருப்பூர், கோபி என ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தைக் கழகத்தின் கொள்கைப் பாசறையாகக் கட்டிக் காத்தவர் ப.நாராயணன். 1971 ஆம் ஆண்டு தேர்தலிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் அன்புக்கிணங்க பொள்ளாச்சியில் நின்று அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வென்று காட்டியவர் நாராயணன்.




## கலங்காத விளக்கு

இவருக்கு முன்னர் கோவை மாவட்டக் கழகத்தின் செயலாளராக இருந்த சம்பத், 1960-களில் கழகத்தில் உட்கட்சிக் குழப்பத்தை உருவாக்கியபோது, கோவை மாவட்டக் கழகத்தை அரண்போல நின்று காத்தார், நாராயணன். சம்பத் அவர்களுடன் நல்ல நட்பு கொண்டிருந்தாலும், கொள்கை என்கிற வகையில் அண்ணாவின் தம்பியாக அவர் கழக உறுதி கொண்டிருந்தார். நாவலர், சி.பி.சிற்றரசு, முத்தமிழறிஞர் கலைஞர் என கழகத்தின் ஆளுமைகளுடன் நல்ல தோழமை உறவு கொண்டிருந்தவர் அவர். அவரிடமிருந்துதான் கழகத்தின் அடுத்த கட்ட தளகர்த்தர்களான எஸ்.ஜே.சாதிக் பாட்சா, மு.கண்ணப்பன் போன்றோர் உருவாகினர். குடும்பப் பாசத்துடன் அண்ணன், தம்பியாக உறவு வைத்து, அவர்களுக்கு அரசியல் பயிற்சி அளித்தார்.

1971 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றிக்குப் பின்னர், சில மாதங்களில் ப.நாராயணன் தனது இறுதிமூச்சை நிறுத்தியது கழகத்தின் பேரிழப்பாக அமைந்தது. கழகத்தின் ஆட்சியில் கண்டுள்ள மாற்றங்களைக் காணாமலேயே அவர் கண் மூடியது கலைஞர் எழுதிய இரங்கல் குறிப்பில் ஏக்கமாக இருக்கும்.

## எளிமையே சொத்து

இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், கடைசிவரை அவர் உடுமலைப்பேட்டையில் வாடகை வீட்டில்தான் குடியிருந்தார். சொந்தமாக வாகனம் வைத்துக் கொண்டதில்லை. மிதிவண்டியில்தான் பயணம். யாராவது காரில் வந்து அழைத்துச் சென்றால்தான் உண்டு என வாழ்ந்தவர்.

அவர் சொத்தாக சேமித்தது கழக உடன்பிறப்புகளைத்தான் எனத் தலைமைக் கழகம் வெளியிட்ட இளைஞர் அணி வெள்ளிவிழா மலர் சொல்கிறது. அந்தச் சொந்தங்கள் நாம் என்று சொல்லவும் வேண்டுமோ..?

...துடிக்கும்

## திராவிடத்தின் சொத்து!



‘திராவிட இயக்கங்களின் உயிர்நாடி, ‘வாசிப்பு இயக்க’த்தில்தான் இருக்கிறது’ என்பார் பேரறிஞர் அண்ணா. வீட்டுக்கு ஒரு நூலகம் அமைக்கப்பட வேண்டும், என்பது அவரது மாபெரும் கனவுகளில் ஒன்று. கழகத்தின் தொடக்க காலங்களில் முடித்திருத்தகம், தேநீர்க் கடைகள் ஆகியவையே கழகத்தின் படிப்பகங்களாக இயங்கின என்பதை நாம் அறிவோம். அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் மாபெரும் நூலகக் கட்டமைப்புகளை உருவாக்கினார், முத்தமிழறிஞர் கலைஞர்.

திராவிட இயக்கத்தினரின் வாசிப்பும் பற்றும் உறுதியும், கடந்த காலங்களை நினைவூட்டுகையில் அவற்றைக் கடந்து செல்ல முடியாது. அந்த வகையில், திண்டுக்கல் ரவுண்ட் ரோடு பகுதியில் இயங்கி வருகிறது, ‘முத்து முடி திருத்தகம்’.

கருப்பு சிவப்பு வண்ணத்தில் கடையின் பெயர், தந்தை பெரியார் படம், வாசலில் திராவிட இயக்கம், சமூகநீதி, சமதர்மம் பேசக்கூடிய நூல்கள் என கவனம் ஈர்க்கிறது. அவரது கடைக்கு வரக்கூடியவர்கள் மட்டுமல்ல, அங்கு ஆசுவாசமாக அமர நினைப்பவர்களுக்கும் அரசியல் பயிலரங்கமாக ‘முத்து முடி திருத்தகம்’ அமைந்துள்ளது. இப்படியான மனிதர்களே திராவிடத்தின் சொத்து.

## :ப்ளாஷ்பேக்



## பொன்னாடை புகைப்படம்!



ராஜேஸ்குமார்

1983 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், கம்பம் நகருக்கு அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் வருகை தந்தார். தற்போதைய கழக மாநில கொள்கைப் பரப்புத் துணைச் செயலாளராக இருக்கும் என் தந்தை கம்பம் இரா.பாண்டியன், தளபதி அவர்களை வரவேற்றுப் பொன்னாடை அணிவித்த போது இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. எங்கள் வாழ்நாளில் கிடைக்காத அரிய பொக்கிஷமாக இந்தப் புகைப்படத்தைக் கருதுகின்றோம்.

**-ஜெ.ராஜேஸ்குமார், இளைஞர் அணி, கம்பம் நகரம் - தேனி தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முத்திரை பதித்த ‘தனி அரசு’!

**1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் ‘தனி அரசு’ திங்கள் இருமுறை ஏடு. பின்னர் நாளேடாக வெளிவந்தபோது, அதனை ‘கழக தினந்தந்தி’ என்று கூறினர். இந்த நாளேட்டில் கழக உறுப்பினர்களின் சட்ட மன்றப் பேச்சுகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வந்தன. திங்கள் இரு முறை ஏடாக இருந்தபோது, ‘தனி அரசு’க்குக் கிடைத்த வரவேற்பைவிட, அது தின இதழாக வந்தபோது அதிகமாக இருந்தது. தி.மு.கழகத்தில் 1960-61 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உட்கட்சி விவாதத்தின்போது ‘தனி அரசு’ தனது தனி முத்திரையைப் பதித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 344




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131